198

# NEW ERA GEOGRAPHY

STANDARD III

198

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 OCT 1942
MADRAS

2450

By

C. SUBRAMANIA MUDALIAR, M.A., L.T.,

*Geography Assistant, Mahajana High School, Erode*

S. R. SUBRAMANIA PILLAI

PUBLISHER :: TIRUNELVELI

நவீன

# பூகோள சாஸ்திரம்

## மூன்றும் வகுப்பு

(1941-ம் வருஷத்தின் ஆரம்பப் பாடசாலைப் பாடத் திட்டத்தை அனுசரித்தது)

910

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 OCT 1942
MADRAS

C. சுப்பிரமணிய முதலியார், M. A., L. T.,
பூகோள ஆசிரியர், மகாஜன ஹைஸ்கூல், ஈரோடு

2458

எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை
பிரசுரகர்த்தர்
திருநெல்வேலி ஜங்ஷன்

பதிப்புரிமை ]

[ விலை அணா 5½

முதற் பதிப்பு: 1942

ஹிலால் பிரஸ், திருநெல்வேலி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 OCT 1942
MADRAS

# முன்னுரை

1941-ம் வருஷம் சென்னை கல்வி இலாகா அதிகாரிகள் வெளியிட்டுள்ள ஆரம்பப் பாடசாலைக்குரிய பூகோள பாடத் திட்டங்களை அனுசரித்து இப்புத்தகம் எழுதப் பெற்றுள்ளது.

படங்களைப் பார்ப்பதில் சிறுவர்களுக்கு ஆசையும், ஆத்திரமும் அதிகமென்பது யாவருமறிவர். நேரில் காணமுடியாத விஷயங்களைப் படங்களிலிருந்து விளக்கி, மனதில் பதிய வைப்பது சிறந்த நேர் முறை ஆகும். அம்முறையைப் பின்பற்றப் பெரிதும் பயன்படுமாறு இப் புத்தகம் பல படங்களுடன் இயற்றப்பட்டுள்ளது.

பிற நாட்டுச் சிறுவர்கள், நம் நாட்டுச் சிறுவர்கள் இவர்களின் உடை, உணவு, வாழ்க்கை முதலியவற்றை விளக்கும் படங்கள் வேண்டுமளவில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. படங்களை உற்று நோக்கி, தம்மில் நின்றும் வேறுபட்ட நடை, உடை, பழக்க வழக்கங்களை உடைய சிறுவர்களின் வாழ்க்கையை எளிதில் அறியும்படி மாணவர்களை ஆசிரியர்கள் தூண்டுவதோடு, விஷயங்களைத் தெளிவாகக் கதை முறையில் விளக்குதல் இன்றியமையாததாகும். அதற்கேற்றவாறு பாடங்கள் செவ்விய முறையில் சிறுவர்களுக்குத் தகுந்த எளிய நடையில் எழுதப் பட்டுள்ளன.

மேலும், தேசப் படங்கள், பத்திரிகைகளில் பிரசுரமாகும் பூகோள சம்பந்தமான படங்கள், பிற சிறந்த புத்தகங்களில் காணும் புகைப் படங்கள் முதலியவற்றையும் ஆசிரியர்கள் சேகரித்து, மாணவர்களுக்குக் காட்டி, அவர்களின் ஊக்கத்தையும், ஆராய்ச்சி ஆற்றலையும், ஆவலையும் எழுப்பவேண்டும். பிள்ளைகளைச் சுற்றுப் புறங்களுக்கு அழைத்துச் சென்று ஆங்காங்கு காணும் காட்சிகள், உணவுப் பொருள்கள், வியாபாரச் சரக்குகள், சுதேச விதேச வஸ்துக்கள் ஆகிய பலவற்றைப் பற்றி விளக்கவும், உபகரணங்கள் சேகரிக்கவும், அட்டவணைகள், காலநிலைக் குறிப்பு முதலியன தயாரிக்கவும் இப் புத்தகம் வழிகாட்டுகிறது. செய்முறை அனுசரித்து, கற்றவை உறம் பெறுமாறு, பாடங்கள் சம்பந்தமாகக் கேள்விகளும், பயிற்சிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இப்புத்தகத்தை எழுதுவதிலும், அச்சிடுவதிலும் எனக்குப் பேருதவி புரிந்த ஸ்ரீமான் லெக்ஷிமி நரஸிம்மய்யர் அவர்களுக்கு நான் மிகவும் நன்றி பாராட்டுகிறேன்.

ஆசிரியர்களும், கல்வி அதிகாரிகளும் இப்புத்தகத்திற்குப் போதிய ஆதரவு அளிக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்

# பொருளடக்கம்


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | திசைகள் | .... | 1 |
| 2. | வகுப்பு அறையின் தரைப் படம் | .... | 3 |
| 3. | பள்ளிக்கூடத்தின் தரைப் படம் | .... | 5 |
| 4. | கிராமத்திலிருந்து செல்லும் பாதைகள் | .... | 7 |
| 5. | லாப்லாந்து சிறுவர்கள் - 1 | .... | 8 |
| 6. | லாப்லாந்து சிறுவர்கள் - 2 | .... | 10 |
| 7. | மத்திய ஆப்பிரிக்காவில் வசிக்கும் பிக்மீஸ் - 1 | .... | 13 |
| 8. | மத்திய ஆப்பிரிக்காவில் வசிக்கும் பிக்மீஸ் - 2 | .... | 15 |
| 9. | 'ஸ்டெப்ஸ்' புல்வெளியில் வசிக்கும் சிறுவர்கள் - 1 | | 17 |
| 10. | 'ஸ்டெப்ஸ்' புல்வெளியில் வசிக்கும் சிறுவர்கள் - 2 | | 19 |
| 11. | பாலஸ்தீன நாட்டுச் சிறுவர்கள் - 1 | .... | 20 |
| 12. | பாலஸ்தீன நாட்டுச் சிறுவர்கள் - 2 | .... | 22 |
| 13. | ஸ்விட்ஸர்லாந்து நாட்டுச் சிறுவர்கள் - 1 | .... | 24 |
| 14. | ஸ்விட்ஸர்லாந்து நாட்டுச் சிறுவர்கள் - 2 | .... | 26 |
| 15. | தஞ்சாவூருக்குப் பக்கத்தில் வசிக்கும் குடியானவச் சிறுவன் - 1 | | 28 |
| 16. | தஞ்சாவூருக்குப் பக்கத்தில் வசிக்கும் குடியானவச் சிறுவன் - 2 | | 30 |
| 17. | காஷ்மீர நாட்டுச் சிறுவன் - 1 | .... | 32 |
| 18. | காஷ்மீர நாட்டுச் சிறுவன் - 2 | .... | 34 |
| 19. | வங்காளத்தில் நிலக்கரி வயல்களில் வசிக்கும் சிறுவர்கள் - 1 | | 35 |
| 20. | வங்காளத்தில் நிலக்கரி வயல்களில் வசிக்கும் சிறுவர்கள் - 2 | | 37 |
| 21. | ஒரு படகச் சிறுவன் - 1 | .... | 39 |
| 22 | ஒரு படகச் சிறுவன் - 2 | .... | 40 |
| 23. | பர்மா தேசத்துச் சிறுவர்கள் - 1 | .... | 41 |
| 24. | பர்மா தேசத்துச் சிறுவர்கள் - 2 | .... | 43 |
| 25. | ஒரு ரூபாய் நாணயம் | .... | 45 |
| 26. | மோட்டார் வண்டிகள் | .... | 46 |
| 27. | பெட்ரோல் எண்ணெய் | .... | 47 |
| 28. | நெல் | .... | 48 |
| 29. | பருத்தி | .... | 49 |
| 30. | நிலக்கடலை | .... | 50 |
| 31. | புகையிலை | .... | 51 |
| 32. | தேயிலை | .... | 52 |
| 33. | காப்பி | .... | 53 |
| 34. | தோல் | .... | 54 |
| | அனுபந்தம் : கால நிலை | .... | 55 |

# நவீன பூகோள சாஸ்திரம்

## மூன்றாம் வகுப்பு

### 1. திசைகள்

சூரியன் உதிக்கும் பக்கத்திற்குக் **கிழக்கு** என்றும், மறையும் பக்கத்திற்கு **மேற்கு** என்றும் பெயர். சூரியன் உதிக்கும் பக்கத்தைப் பார்த்து நின்றுகொண்டால், இடது கைப் புறமுள்ள பக்கம் **வடக்கு**, வலது கைப்புறமுள்ள பக்கம் **தெற்கு**. பக்கம் என்பதற்குப் பதிலாக **திசை** என்றும் சொல்லலாம்.

தரையின் மீது கிழக்கு மேற்காகவும், தெற்கு வடக்காகவும், படத்தில் காட்டியதுபோல் இரண்டு கோடுகள் வரை. கோடுகளின் ஒவ்வொரு நுனியும் குறிப்பிடும் பக்கத்தின் முதல் எழுத்தை ஆங்காங்கு எழுது. மேற்கூறிய நான்கு திசைகளுக்கும் இடையிடையேஉள்ள நான்கு மூலைகளையும் கவனி. வடக்கு, கிழக்குத் திசைகளுக்கு இடையிலுள்ள மூலைக்கு **வடகிழக்குத் திசை** என்று பெயர். தெற்கு, கிழக்குத் திசைகளுக்கு இடையிலுள்ள மூலைக்குத் **தென்கிழக்குத் திசை** என்று பெயர்.



தெற்கு, மேற்குத் திசைகளுக்கு மத்தியிலுள்ள மூலையைத் தென்மேற்குத் திசை என்பார்கள். வடக்கு, மேற்குத் திசைகளுக்கு நடுவிலுள்ள மூலையை வடமேற்குத் திசை என்பார்கள்.




தரையின் மீது கோடுகள் வரைந்து எட்டுத் திசைகளையும் குறிப்பிடு.

இது ஒரு திசையறி கருவி. ஒரு ஊசியின் முனை மீது ஒரு முள் வைக்கப்பட்டிருக்கிறது அல்லவா? இந்த முள்ளுக்கு காந்த ஊசி என்று பெயர். இதன் ஒரு முனை எப்பொழுதும் வடக்குத் திசையையே காட்டும். ஆதலால் இந்தக் கருவியின் உதவியால் ஒரு ஊரின் திசைகளை எந்த வேளையிலும் அறிந்து கொள்ளலாம்.



## கேள்விகள்

1. ஒரு ஊரின் திசைகளை எவ்விதம் அறிவாய்?
2. காந்த ஊசியின் உதவியால் எவ்விதம் திசைகளைக் கண்டுபிடிப்பாய்?
3. உன் பள்ளிக்கூடம் எந்தத் திசையைப் பார்த்து இருக்கிறது?

## பயிற்சி

1. பள்ளிக்கூடக் காம்பவுண்டில் தரையின்மீது எட்டுத் திசைகளையும் குறிக்கும்படியான கோடுகளை வரை.

2. உன் பள்ளிக்கூடத்திலிருந்து உன்னுடைய வீடு, குளம், கோயில் முதலிய இடங்களுக்குப் போகும் வழியைச் சுட்டிக் காட்டு. அவை ஒவ்வொன்றும் பள்ளிக்கூடத்திற்கு எந்தத் திசையில் இருக்கிறது என்பதையும் சொல்லு.

## 2. வகுப்பு அறையின் தரைப் படம்

பிள்ளைகளே, உங்கள் சிலேட்டுகளின் மேற்பக்கம் வடக்குத் திசையை நோக்கி இருக்கும்படி அவைகளைத் தரையின் மீது வையுங்கள். சிலேட்டின் மேற்பக்கமாக வகுப்பு அறையின் வடக்குச் சுவரைக் குறிக்க ஒரு நேர் கோடு வரையுங்கள். அதுபோல வகுப்பு அறையின் கிழக்குச் சுவர், தெற்குச் சுவர், மேற்குச் சுவர் இவைகளைக் குறிக்க நேர்கோடுகள் ஒன்றையொன்று சந்திக்கும்படி வரையுங்கள். ஜன்னல்கள், வாசல் முதலியன உள்ள இடங்களையும் குறிப்பிடுங்கள். இப்பொழுது சிலேட்டின் மீது வரையப்பட்ட வடிவம் ஒரு நீண்ட சதுரம் ஆகும். இது **வகுப்பு அறையின் தரைப்படம்.**




சிலேட்டின் ஒரு மூலையில் நான்கு திசைகளையும் காட்டும்படி கோடுகள் வரைந்து திசைகளின் பெயர்களைக் குறித்துக் கொள்ளுங்கள். சிலேட்டின் மேற்பக்கத்தைப் பிடித்துத் தூக்கி, அதில் வரையப்பட்ட படம் உங்களை நோக்கி இருக்கும்படி அதை ஒரு ஆணியில் மாட்டுங்கள். அப்பொழுது அப்படத்தின் மேற்பக்கம் வடக்கையும், அடிப் பக்கம் தெற்கையும் குறிக்கின்றன அல்லவா? படத்தை நோக்கி நின்று கொள்ளுங்கள். படத்தில் உங்கள் வலது கைப் பக்கம் கிழக்கையும், இடது கைப்பக்கம் மேற்கையும் குறிப்பதைக் கவனியுங்கள்.

ஒரு படத்தில் அதன் மேற்பக்கம் வடக்கு, அடிப்பக்கம் தெற்கு; படத்தைப் பார்த்து நின்றுகொண்டால் படத்தில் நமது வலது கைப்பக்கம் கிழக்கு, இடது கைப்பக்கம் மேற்கு.




பக்கத்தில் ஒரு வகுப்பு அறையின் தரைப்படம் வரையப்பட்டிருக்கிறது. அதில் நாற்காலி, மேஜை, பெஞ்சுகள், கரும்பலகை இவற்றின் இருப்பிடங்கள் குறிக்கப்பட்டிருப்பதைக் கவனியுங்கள்.

### கேள்விகள்

1. ஒரு படத்தில் திசைகளை எவ்விதம் கண்டுபிடிப்பாய்?
2. கொடுக்கப்பட்டுள்ள தரைப்படத்தில், உபாத்தியாயரின் நாற்காலி எந்தச் சுவரின் பக்கத்தில் இருக்கிறது? அவர் எத்திசையைப் பார்த்து உட்கார முடியும்?

### பயிற்சி

கொடுக்கப்பட்ட தரைப் படத்தைப்போல உன் வகுப்பு அறையின் தரைப் படத்தை வரை. நீ உட்காரும் இடத்தை × அடையாளம் போட்டுக் குறிப்பிடு. அவ்விடத்திலிருந்து நீ வாசலுக்குச் செல்லும் பாதையைப் புள்ளிகளால் குறிப்பிடு. வாசலிலிருந்து உன் இடத்திற்கு வரும் வழியைச் சொல்லு.

# 3. பள்ளிக்கூடத்தின் தரைப்படம்

பிள்ளைகளே, உங்கள் வகுப்பு அறையின் தரைப் படத்தை வரைய நீங்கள் கற்றுக்கொண்டீர்கள். அதுபோல உங்கள் பள்ளிக்கூடத்தின் தரைப்படத்தை வரைய நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.




ஒரு காகிதத்தை எடுத்துக்கொண்டு அதன் ஒரு மூலையில் நான்கு திசைகளையும் கோடுகள் வரைந்து குறித்துக் கொள்ளுங்கள். பள்ளிக்கூடத்தின் காம்பவுண்டு சுவர்களைக் குறிக்கும் கோடுகளை வரையுங்கள். பிறகு வகுப்பு அறைகள், தாழ்வாரம் முதலியன உள்ள இடங்களைக் கோடுகள் வரைந்து குறிப்பிடுங்கள். தோட்டம், விளையாடும் இடம் முதலியன உள்ள இடங்களையும் படத்தில் காட்டுங்கள்.

முன் பக்கத்தில் ஒரு பள்ளிக்கூடத்தின் தரைப் படம் வரையப்பட்டுள்ளது. அதைக் கவனித்துக் கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லு.

பள்ளிக்கூடம் எந்தத் திசையைப் பார்த்து இருக்கிறது? பள்ளிக்கூடத்தில் எத்தனை வகுப்புகள் இருக்கின்றன? பள்ளிக்கூடத்திற்கு எந்தப் பக்கத்தில் ரஸ்தா செல்லுகிறது? தோட்டம் எந்தப் பக்கத்தில் இருக்கிறது? விளையாடும் இடம் எந்தப் பக்கத்தில் இருக்கிறது? கிணறு எந்த மூலையில் இருக்கிறது?

பயிற்சி

1. உங்கள் பள்ளிக்கூடக் காம்பவுண்டின் தரைப்படத்தை வரையவும்.




2. பக்கத்தில் காட்டியுள்ள தரைப்படத்தில் ஜான் என்ற பையனுடைய வீட்டையும் அவன் படிக்கும் பள்ளிக்கூடத்தையும் குறிப்பிட்டிருப்பதைக் கவனி. அப் பள்ளிக்கூடத்திலிருந்து ஜானுடைய வீட்டிற்குச் செல்லும் பாதையை விவரி.

3. பள்ளிக்கூட வாசலிலிருந்து உன் வீட்டிற்குச் செல்லும் வழியை தரைப் படம் வரைந்து காட்டு.

## 4. கிராமத்திலிருந்து செல்லும் பாதைகள்

பிள்ளைகளே, உங்கள் கிராமத்தின் பக்கத்தில் ரெயில்வே ஸ்டேஷன் இருக்கிறதா? இருந்தால், உங்கள் ஊரிலிருந்து ஸ்டேஷனுக்குப் போகும் பொழுது எந்தெந்தத் திசைகளில் திரும்பவேண்டும்? உங்கள் ஊரிலிருந்து எந்தெந்த ஊர்களுக்கு ரஸ்தாக்கள், நடைப்பாதைகள் செல்லுகின்றன? எந்தத் திசையை நோக்கிச் செல்லுகின்றன? ரஸ்தாக்களின் வழியாக பஸ்கள் போகின்றனவா?




பக்கத்தில் ஒரு கிராமத்தின் தரைப் படம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் ரெயில்வே ஸ்டேஷன், கோயில், குளங்கள், வயல்கள் இருக்கும் இடங்களைக் கவனியுங்கள்.

### பயிற்சி

உங்கள் கிராமத்தைச் சுற்றிப் பார்த்துவந்து, கிராமத்தின் தரைப் படத்தை வரையுங்கள்.

# 5. லாப்லாந்து சிறுவர்கள்—1

ஐரோப்பாக் கண்டத்தின் வட பாகத்தில் **லாப்லாந்து** என்ற இடம் இருக்கிறது. அங்குள்ள ஜனங்களுக்கு **லாப்ஸ்** என்று பெயர். லாப்லாந்தில் கேரி என்று ஒரு சிறுவன் வசிக்கிறான்.

லாப்லாந்தில் குளிர் அதிகம்; குளிர்காலத்தில் தரை பனியால் மூடப்படும். ஆகையால் அங்குள்ளவர்கள் பயிரிட்டு ஜீவனம் செய்ய முடியாது.

லாப்லாந்தில் கலைமான்கள் அதிகம். கேரியின் தகப்பனார் பல கலைமான்களை வளர்க்கிறார். கேரி அவைகளை மேய்த்து வருவான்.

கேரி நிஜார், சட்டை, ஜோடுகள், கையுறைகள் முதலியன அணிகிறான். இவை கலைமான்களின் தோலினால் செய்யப்பட்டவை. கேரி தலையில் சிவப்புத் துணியால் தைக்கப்பட்ட குல்லா வைத்துக்கொள்வான்.

கேரியின் குடும்பத்தார் மேய்ச்சல் தரையைத் தேடி அடிக்கடி இடம் மாற வேண்டியிருக்கும் அல்லவா? ஆதலால் அவர்கள் நிலையாக வீடுகளைக் கட்டிக்கொண்டு வசிப்பதில்லை அவர்கள் கோடை காலத்தில் கூடாரத்தில் வசிக்கிறார்கள். கூடாரம் கலைமான்களின் தோல்களால் போடப்பட்டிருக்கும்.

கேரி, கலைமான்களை சக்கரமில்லாத வண்டியில் பூட்டி

ஓட்டிக் கொண்டு போவான். சேணங்களில் மணிகள் கட்டப் பட்டிருக்கும். ஆகையால் வண்டி போகும்பொழுது ஜில், ஜில் என்று சத்தம்கேட்கும். அந்த வண்டியை ஓட்டிச் செல்லுவதில் கேரிக்கு உற்சாகம் அதிகம்.



லாப்ஸ் ஜனங்கள் வழிநடக்கும் பொழுது குழந்தைகளைக் கலைமான்களின் மீது உட்காரவைத்துக் கொள்வதும் உண்டு.

கேரியின் தாயார் கலைமான்களின் பாலிலிருந்து வெண்ணெய், பாலடைக்கட்டி முதலியன தயார் செய்வாள். கேரியின் குடும்பத்தாருக்கு கலைமான்களின் மாமிசம், பால், வெண்ணெய், மீன் முதலியன முக்கிய ஆகாரப் பொருள்கள் ஆகும்.

### கேள்விகள்

1. லாப்ஸ் ஜனங்களுக்கு கலைமான்கள் எவ்விதம் உபயோகப்படுகின்றன ?
2. கேரியின் பெற்றோர்கள் ஏன் நிலையாக வீடுகளைக் கட்டிக்கொள்வதில்லை ?

### பயிற்சி

1. கேரியைப் போல் உடை உடுத்திக்கொண்டு அவன் தன் நாட்டைப்பற்றிச் சொல்லுவது போல் சொல்லவும்.
2. கேரி உபயோகிக்கும் வண்டி, அதை இழுத்துச் செல்லும் கலைமான் இவைகளைப் போல் அட்டையால் செய்யவும்.

## 6. லாப்லாந்து சிறுவர்கள் — 2

கேரி குளிர் காலத்தில் கூடாரத்தில் வசிக்க முடியாது. அக்காலத்தில் அவனுடைய பெற்றோர்கள் தம் குடும்பத்துடனும், வேறு சில குடும்பத்தார்களுடனும் காடுகளுள்ள இடத்திற்குச் செல்லுவார்கள். அங்கு அவர்கள் மரக்கட்டைகளாலும், மண்ணாலும் பனிக்கட்டியாலும் வீடுகளைக் கட்டிக் கொண்டு வசிப்பார்கள்.



கேரியும் அவனுடைய தகப்பனும் பக்கத்திலுள்ள ஏரிக்குச் சென்று மீன்களைப்பிடிப்பார்கள்; பறவைகளைப் பிடிப்பார்கள். இவர்கள் சில சமயங்களில் உரோமத்தோல் பிராணிகளைக் கண்ணிவைத்துப் பிடித்து வருவதும் உண்டு.

லாப்ஸ் ஜனங்கள் வசிக்கும் பிரதேசத்தில் ஓநாய்கள் அதிகம். அவை கூட்டம் கூட்டமாக வந்து கலைமான்களைத் தாக்கும். ஓநாய்கள் வருவதைக் கண்டதும் கேரியின் நாய்கள் பலமாகக் குரைக்கும். உடனே கேரியின் தகப்பனும் அவருடைய சிநேகிதர்களும் ஓடிவந்து ஓநாய்களைத் தடிகளால் அடித்தும், ஈட்டிகளால் குத்தியும் கொல்லுவார்கள்; அவைகளை வெருட்டித் துரத்துவார்கள்.





லாப்ஸ் ஜனங்கள் தங்கள் ஆகாரப் பொருள்களையும், உடைகளையும் ஓநாய்கள் எடுத்துச் செல்லாதபடி அவைகளைப் பரண்களின் மீது வைத்துக் கொள்வார்கள்.

கேரியின் தகப்பனார் வீட்டிலிருக்கும் பொழுது கலைமான்களின் கொம்புகள், எலும்புகள், மரக்கட்டை இவைகளால் கத்திப்பிடி, சாட்டையின் பிடி, பொம்மைகள் முதலியவைகளைச் செய்வார்.

கேரியின் தாயார் அவனுக்கு அநேக கதைகள் சொல்லுவாள்; பாடுவதற்கும் சொல்லிக் கொடுப்பாள்.



கேரியும் மற்றச் சிறுவர்களும் பனிக்கட்டியில் சறுக்கி விளையாடுவார்கள். சிறு குழந்தைகளை வண்டியில் வைத்து இழுத்துச் சென்று விளையாடுவார்கள்.

கேரியின் சகோதரிகள் பொம்மைகளுக்கு உடைகளைத் தைத்துப்போட்டு அவைகளை வைத்து விளையாடுவார்கள்; தாயாருக்கு உதவியாக வீட்டு வேலைகளைச் செய்து வருவார்கள்; குழந்தையை வைத்துக் கொள் வார்கள்.

குழந்தையின் தொட்டில் மரக் கட்டையில் குடைந்து செய்யப் பட்டிருக்கும். அதில் மணிகள், பொம்மைகள் முதலியன கட்டப் பட்டிருக்கும். தொட்டில் ஆடும் பொழுது மணி ஓசை கேட்கும். லாப்ஸ் குழந்தைகள் ஒரு பொழு தும் அழுவது இல்லையாம்.

கேரியின் தகப்பனார் தாம் சேகரித்த தோல், உரோமத் தோல், மரப் பொம்மைகள், செருப்புகள் இவைகளை விற்ப தற்கு வெகு தூரத்திலுள்ள பட்டணத்திற்குப் போவார் அப்பொழுது கேரியும் அவருடன் செல்லுவான். அவர்கள் தாம் கொண்டுபோகும் சாமான்களை விற்று, பதிலுக்கு அரிசி, மா, துணிகள், புகையிலை, சர்க்கரை, காப்பி முதலியன வாங்கிக் கொண்டு திரும்புவார்கள்.

கேள்விகள்

1. கேரி குளிர் காலத்தில் எவ்விதமான வீட்டில் வசிக்கிறான்?

2. கேரி தன் தகப்பனாருடன் சென்று வேட்டையாடிக் கொண்டுவரும் பிராணிகள் எவை?

பயிற்சி

1. பரண் வீட்டைப் போல் படம் வரைக.

2. கேரியின் வீட்டிலுள்ள தொட்டிலைப்போல் அட்டையால் தொட்டில் செய்யவும்.

# 7. மத்திய ஆப்பிரிக்காவில் வசிக்கும் பிக்மீஸ்-1

ஆப்பிரிக்காக் கண்டத்தின் மத்திய பாகத்தில் மரம், செடி, கொடிகள் மிகவும் நெருக்கமாக வளர்ந்துள்ள காடுகள்

இருக்கின்றன. அங்கு வெயில் அதிகமாக இருக்கும்; மழை அதிகம் பெய்யும். ஆகையால்தான் அங்கு அடர்ந்த காடுகள் இருக்கின்றன.

அந்தக் காடுகளில் யானைகள், குரங்குகள், பெரிய பாம்புகள் முதலியன ஏராளமாகத் திரியும். அங்கு பாயும் நதிகளில் முதலைகள், நீர்யானைகள் முதலியன வசிக்கும்.



அந்தக் காடுகளில் பிக்மீஸ் என்னும் ஜனங்கள் வசிக்கிறார்கள். அவர்கள் மிகவும் குட்டையானவர்கள். அங்குள்ள ஒரு சிறுவன் பெயர் **மம்பிலி**. அவன் இடுப்பில் இலைகளையும் புற்களையும்தான் உடுத்திக் கொள்வான். அவன் வசிக்கும் வீடு ஒரு சிறிய குடிசை. அது கவிழ்த்தி வைக்கப்பட்ட

ஒரு கிண்ணம்போல இருக்கும். வளையக்கூடிய கம்புகளாலும், விசிறிபோன்ற இலைகளாலும் அது கட்டப்பட்டிருக்கும். மம்பிலியின் வீட்டின் பக்கத்தில் அவன் வீட்டைப் போன்ற பத்து அல்லது பதினைந்து குடிசைகள் காணப்படும்.

மம்பிலியின் தகப்பனும், அவருடைய சிநேகிதர்களும் வில்லையும் அம்புகளையும் எடுத்துக்கொண்டு வேட்டைக்குப் போவார்கள் அவர்கள் ஒரு சிறிய கலயத்தை அரைக் கச்சையில் கட்டித் தொங்க விட்டிருப்பார்கள். அதில் விஷமிருக்கும். அவர்கள் அம்புகளின் நுனிகளை விஷத்தில் தோய்த்து மான், காட்டெருமை முதலிய மிருகங்களின் மீது அந்த அம்புகளை எய்து அவைகளைக் கொல்வார்கள். அவர்கள் யானைகளைக்கூட அம்புகள் எய்து கொன்று விடுவார்கள்.

மம்பிலி தன் சிநேகிதர்களுடன் வேட்டையாடப் போவான். அவர்கள் அம்புகளை எய்து குரங்குகளைக் கொல்வார்கள்; ஆமைகளைத் தேடிப் பிடிப்பார்கள்; பறவைகளின் முட்டைகளை எடுத்து வருவார்கள்; காய்களையும் பழங்களையும் கிழங்குகளையும் சேகரிப்பார்கள்.

### கேள்விகள்

1. பிக்மீஸ் ஜனங்கள் எங்கு வசிக்கிறார்கள்? அவர்கள் எவ்விதம் இருப்பார்கள்?
2. மம்பிலி என்னும் பிக்மீஸ் சிறுவன் காட்டிலிருந்து என்னென்ன பொருள்களைச் சேகரித்துக் கொண்டுவருவான்?

### பயிற்சி

தரையில் ஈரக் களிமண்ணைப் பரப்பி அதில் சிறிய கொப்புகளை நட்டுக் காடுபோல் அமைக்கவும். அட்டையில் யானை, மான், காட்டெருமை, குரங்கு, பாம்பு இவைகளைப்போல் தயாரித்து ஆங்காங்கு வைக்கவும். பிக்மீஸ் ஜனங்கள் வேட்டைக்குச் செல்லும் பொழுது காணப்படுவதுபோல் சில பொம்மைகளை அலங்கரித்துப் பக்கத்தில் நிறுத்தவும்.

# 8. மத்திய ஆப்பிரிக்காவில் வசிக்கும் பிக்மீஸ்-2

மம்பிலியும் மற்றவர்களும் ஆகாரப் பொருள்களை அநேகமாகப் பச்சையாகவே தின்பார்கள். சில சமயங்களில் அவனுடைய தாயார் ஒரு பெரிய பானையில் மாமிசம், கிழங்குகள், பழங்கள் முதலியவற்றைப் போட்டு வேக வைத்து, உப்பையும் போட்டுச் சமைப்பாள். மம்பிலியும், அவன் வீட்டிலுள்ள மற்றவர்களும் பானையைச் சுற்றி உட்கார்ந்துகொண்டு அதிலிருந்து ஆகாரத்தை எடுத்துச் சாப்பிடுவார்கள்.



பிக்மீஸ் ஜனங்கள் மத்தியானச் சாப்பாட்டிற்குப் பிறகு தூங்குவார்கள். தூங்கி எழுந்த பிறகு கூத்தாடுவதும் உண்டு.



மம்பிலியின் தாயாரும் சகோதரிகளும் வீட்டு வேலைகளைக் கவனிப்பார்கள். அவர்கள் களி மண்ணால் வீட்டிற்கு வேண்டிய சட்டி பானைகளைச் செய்வார்கள். இரும்புக் கம்பிகளால் முறுக்கு வளையல்களைச் செய்வார்கள். வீடுகளைக் கட்டுவார்கள்.

பிக்மீஸ் ஜனங்கள் தாம் காடுகளில் சேகரிக்கும் காய்கள், பழங்கள், தேன் முதலியவைகளையும் இறைச்சி, குரங்குகளின் தோல் முதலியவைகளையும் எடுத்துக் கொண்டு காடுகளின் வெளிப் புறத்திற்குப் போவார்கள். அங்கு அவைகளைக் குறிப்பிட்ட சில செடிகளில் கட்டி விட்டு ஒளிந்து இருப்பார்கள். அங்கு வரும் நீக்ரோ வியாபாரிகள் அந்தச் சாமான்களை எடுத்துக் கொண்டு பதிலுக்கு உப்பு, இரும்புக் கம்பிகள், தானியம் முதலியவற்றை வைத்துச் செல்லுவார்கள். பிக்மீஸ் அவைகளை எடுத்துக் கொண்டு தம் குடிசைகளுக்குத் திரும்புவார்கள்.



இக்காலத்தில் மத்திய ஆப்பிரிக்காவிலுள்ள காடுகளில் சில ஐரோப்பியர்கள் வசிக்கிறார்கள். அவர்களிடம் சில பிக்மீஸ் ஜனங்கள் வேலை பார்த்து வருகிறார்கள். அவர்கள் தம் எஜமானர்களுக்காக காடுகளில் கிடைக்கும் யானைத் தந்தங்களைச் சேகரித்து வருகிறார்கள். ரப்பர் மரங்களிலிருந்து ரப்பர் பால் எடுத்து வருகிறார்கள்.

### கேள்விகள்

1. பிக்மீஸ் ஜனங்கள் மத்தியானத் தூக்கத்திற்குப் பிறகு என்ன செய்வார்கள்?
2. மம்பிலியின் தாயாரும் சகோதரிகளும் என்ன வேலைகளைச் செய்து வருவார்கள்?
3. இவர்கள் தங்களுக்கு வேண்டிய உப்பு, இரும்புக் கம்பிகள், ஈட்டி முனைகள், தானியம் முதலிய பொருள்களை எவ்விதம் அடைகிறார்கள்?

### பயிற்சி

பிக்மீஸ் வசிக்கும் குடிசைகளைப்போல் மரக்குச்சிகளாலும் இலைகளாலும் செய்யவும்.

# 9. 'ஸ்டெப்ஸ்' புல்வெளியில் வசிக்கும் சிறுவர்கள் - 1

ஆசியாக் கண்டத்தின் மேற்குப் பாகத்தில் மேற்குத் துருக்கிஸ்தானம் என்னும் ஒரு நாடு இருக்கிறது.



அங்கு புல்வெளிகள் இருக்கின்றன. அப்புல்வெளிகளுக்கு 'ஸ்டெப்ஸ்' என்று பெயர். அங்கு கிர்கிஸ் என்னும் ஜனங்கள் கூடாரங்களில் வசிக்கிறார்கள்.



ஜென்கின் என்பவன் ஒரு கிர்கிஸ் சிறுவன். அவன் கம்பளத்தால் போடப்பட்ட ஒரு கூடாரத்தில் வசிக்கிறான். கூடாரத்தின் மேற்பாகத்தில் நடுவில் புகை போவதற்கு ஒரு திறப்பு உண்டு. கூடாரத்தினுள் தரையின் மீது கம்பளங்கள் விரிக்கப்பட்டிருக்கும்; தோலாலும் மரத்தாலும் செய்யப்பட்ட சாமான்கள் காணப்படும்.



ஜென்கினுடைய தகப்பனார் அநேக குதிரைகள், ஒட்டகங்கள், செம்மறியாடுகள், வெள்ளாடுகள், மாடுகள் முதலியவற்றை வளர்த்து வருகிறார். ஆயினும் ஆடுகள் தான் அதிகம். ஜென்கினுக்கு

குதிரைச் சவாரி செய்யத் தெரியும். அவன் குதிரை மீது ஏறிக்கொண்டு ஆடு மாடுகளையும், குதிரைகளையும் மேய்த்து வருவான். குதிரையை ஓட்டுவதற்கு அவன் ஒரு நீள மான சவுக்கு வைத்திருப்பான்.

ஜென்கீனும் அவனுடைய பெற்றோர்களும் தங்கள் ஆடுமாடுகள் மேய்வதற்கு வேண்டிய புல் தரைகளைத் தேடி அடிக்கடி இடம் மாற வேண்டியிருக்கும். ஆகையால் தான் அவர்கள் கூடாரம் அமைத்து வசிக்கிறார்கள். கூடாரம் போடுதல், எடுத்தல் முதலிய வேலைகளை ஜென்கீனின் தாயாரும் சகோதரிகளும் கவனிப்பார்கள். அவர்களுக்கு ஆடு, ஒட்டகம் இவற்றின் உரோமத்தால் ஒருவிதக் கம்பளம் செய்யத் தெரியும். அதற்கு **'பெல்ட் கம்பளம்'** என்று பெயர். அதைக் கொண்டு தொப்பிகள் செய்வார்கள்.

ஜென்கீனும் அவனுடைய பெற்றோர்களும் ஆட்டு இறைச்சி, பால், வெண்ணெய், பாலடைக்கட்டி முதலிய வற்றை முக்கியமாகச் சாப்பிடுவார்கள். தவிர, கோதுமை, தேயிலை இவைகளை வியாபாரிகளிடம் வாங்கி உபயோகித்துக் கொள்வார்கள். விருந்துச் சாப்பாடு தினங்களில் குதிரை இறைச்சியையும் சாப்பிடுவார்கள்.

### கேள்விகள்

1. 'ஸ்டெப்ஸ்' புல்வெளிப் பிரதேசம் எங்கு இருக்கிறது ?
2. அங்கு வசிக்கும் ஜனங்கள் யார் ?
3. கிர்கிஸ் ஜனங்கள் ஏன் நிலையாக ஓரிடத்தில் வசிப்பதில்லை ?
4. அவர்கள் வசிக்கும் கூடாரம் எவ்விதம் இருக்கும் ?
5. அவர்களின் ஆகாரம் என்ன ?

### பயிற்சி

கிர்கிஸ் ஜனங்கள் வசிக்கும் கூடாரத்தைப் போல் படம் வரைக.

# 10. 'ஸ்டெப்ஸ்' புல்வெளியில் வசிக்கும் சிறுவர்கள் - 2

'ஸ்டெப்ஸ்' புல்வெளிப் பிரதேசத்தில், குளிர் காலத்தில் தரை பனியால் மூடப்படும். குளிர்ந்த புயல்காற்று பலமாக வீசும். ஆகையால் ஜென்கீனின் தகப்பனூர் தம் குடும்பத்துடனும் மந்தைகளுடனும் மலைச் சரிவுகளுக்குச் சென்று அங்கு கற்களால் கட்டப்பட்ட வீட்டில் வசிப்பார்.

ஜென்கீனின் தகப்பனூர் ஆட்டுக் குட்டிகளையும், கன்றுகளையும் குகைகளில் அடைத்துப் பாதுகாப்பார். கோடை காலத்திலேயே சேகரித்து வைத்திருக்கும் புல்லை அவைகளுக்குப் போட்டு வருவார்.

ஜென்கீனுக்கு வேண்டிய உடைகளை அவனுடைய தாயார் தைத்துக் கொடுக்கிருள். அவன் கம்பளத்தால் தைக்கப்பட்ட நிஜார், உட்சட்டை, மேல்சட்டை இவைகளைப் போட்டுக்கொள்வான். அவனுடைய ஜோடுகள் முழங்கால்கள் வரை நீண்டிருக்கும். அவனுடைய தாயாரும் சகோதரிகளும் அவனைப் போலவே உடுத்திக்கொண்டு தலையின் மீது வெள்ளைத் துணியை முக்காடாகப் போட்டுக் கொள்வார்கள்.

**கேள்விகள்**

1. 'ஸ்டெப்ஸ்' புல்வெளிப் பிரதேசத்தில் குளிர்காலம் எவ்விதம் இருக்கும்?
2. குளிர்காலத்தில் கிர்கிஸ் ஜனங்கள் எங்கு வசிப்பார்கள்?

**பயிற்சி**

சில பொம்மைகளுக்கு கிர்கிஸ் ஜனங்களின் உடைகளைப் போல் தைத்துப் போடவும்.

## 11. பாலஸ்தீன நாட்டுச் சிறுவர்கள் - 1

ஆசியாக் கண்டத்தின் மேற்குப் பாகத்தில் மத்திய தரைக்கடல் ஓரமாக **பாலஸ்தீனம்** என்னும் நாடு இருக்கிறது. அந்த நாட்டில் மழை குறைவு; பகல் வேளைகளில் வெயில் கடுமையாக இருக்கும். பாலஸ்தீனத்தின் தலை நகரம் **ஜெரூஸலம்**. அது கிறிஸ்தவர்கள், யூதர்கள், முகம்மதியர்கள் ஆகிய இவர்களின் புண்ணிய ஸ்தலம்.



ஜெரூஸலத்தில் **யாகோப்பு** என்னும் ஒரு சிறுவன் வசிக்கிறான். அவன் வசிக்கும் வீடு மாடிவீடு. ஜன்னல்கள் சிறியனவாக இருக்கும். ஆதலால் வீட்டிற்குள் கண்கள் கூசும்படியான வெளிச்சம் வராது; குளிர்ச்சியாகவும் இருக்கும். யாகோப்பின் வீட்டிலுள்ளவர்கள் சாயங்கால வேளைகளில் திறந்த மாடியில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பார்கள். இரவு வேளைகளில் மாடிகளிலேயே படுத்துத் தூங்குவதும் உண்டு.



ஜெரூஸலம் பட்டணத்தின் தெருக்கள் நெருக்கமாக இருக்கும். தெருக்களில் யூதர்கள், அரபியர்கள், முகம்மதியர்கள் முதலிய பல இனத்தார்களைக் காணலாம்.

இப்பட்டணம் ஒரு பெரிய வியாபார ஸ்தலம். பக்கத்திலுள்ள பாலைவனப் பிரதேசத்திலிருந்து வியாபாரிகள் ஒட்டகங்களின்மீது சரக்குகளைக் கொண்டு வருவார்கள். அந்த ஒட்டகங்களை இப்பட்டணத்தின் தெருக்களில் காணலாம்.

யாகோப்பும் அவனுடைய தகப்பனும் தொள தொளப்பான ஆடைகளை அணிகிறார்கள். தலையில் தொப்பி வைத்துக் கொள்வார்கள். யாகோப்பின் தகப்பனார் ஒரு கம்பள அங்கியை மேலாகப் போட்டுக் கொள்வார். அவர் வெளியில் செல்லும்பொழுது நேர்த்தியான ஒரு தலைக்குட்டையைத் தலையில் கட்டிக்கொள்வார். கால்களில் ஜோடுகளை மாட்டிக் கொள்வார். யாகோப்பின் தாயாரும் சகோதரிகளும் பாவாடை, ரவிக்கை, மேலாக்கு முதலியவைகளை அணிந்து கொள்வார்கள். தலையில் முக்காடு போட்டுக் கொள்வார்கள். இவர்களுக்குப் பலவித நிறமான ஆடைகளை உடுத்திக் கொள்வதில் பிரியம் அதிகம்.

## கேள்விகள்

1. ஜெருஸலத்திலுள்ள வீடுகள் எவ்விதம் இருக்கும்? ஜன்னல்கள் சிறியனவாக இருப்பதால் என்ன அனுகூலம்?
2. ஜெருஸலத்தில் என்னென்ன இனத்தார்களைக் காணலாம்?
3. யாகோப்பும் அவனுடைய பெற்றோர்களும் எவ்விதமான உடைகளை அணிகிறார்கள்?

## பயிற்சி

யாகோப்பின் வீட்டைப் போல் படம் வரைக.

# 12. பாலஸ்தீன நாட்டுச் சிறுவர்கள் -2

யாகோப்பின் மாமன் பாலஸ்தீன நாட்டின் மேற்குப் பாகத்தில் வசிக்கிறார். சில சமயங்களில் யாகோப்பு தன் மாமன் வீட்டிற்குப் போவது உண்டு. அப்பொழுது அவன் தன் வீட்டில் வளர்க்கப்படும் கழுதையின் மீது ஏறிப் பிரயாணம் செய்வான்.



பாலஸ்தீன நாட்டின் மேற்குப் பாகத்தில் கோடை காலத்தில் உஷ்ணம் மிதமாகவும், குளிர் காலத்தில் குளிர் மிதமாகவும் இருக்கும். இங்கு குளிர் காலத்தில் கொஞ்சம் மழை பெய்யும்.

யாகோப்பின் மாமன் ஒரு குடிசையில் வசிக்கிறார். அவருக்குப் பயிரிடுவதுதான் முக்கிய வேலை. அவர் தன் வயல்களில் கோதுமை பயிரிடுவார். அங்கு அறுவடை காலங்களில் கழுதைகளைக்கொண்டு பிணையல் அடிப்பது உண்டு. யாகோப்பின் தோட்டங்களில் அத்தி, ஆரஞ்சு, திராக்ஷை முதலிய பழவகைகளைப் பயிர் செய்கிறார். யாகோப்பு தன் மாமனுடன் தோட்டங்களுக்குச் சென்று பழங்களைப் பறித்துத் தின்பான். மாமன் பழங்களைச் சேகரித்து அயல் இடங்களுக்கு அனுப்புவார்.

மாமனுடைய தோட்டத்தில் பல ஆலிவ் மரங்களும் முசுக்கட்டை மரங்களும் உண்டு. ஆலிவ் காய்களை ஊறுகாய் போடுவார்கள். ஆலிவ் பழங்களின் கொட்டைகளைச் செக்கில் போட்டு ஆட்டி எண்ணெய் எடுப்பார்கள். இந்த எண்ணெயை நெய்க்குப் பதிலாக உபயோகிப்பார்கள். தவிர, இந்த எண்ணெய் சோப்பு செய்யவும் உதவும்.

மாமனுடைய வீட்டில் பட்டுப்பூச்சிகளை வளர்க்கிறார்கள். அப்பூச்சிகளின் புழுக்களுக்கு முசுக்கட்டை இலைகளை ஆகாரமாகப் போடுவார்கள். அப்புழுக்கள் கட்டும் கூடுகளிலிருந்து பட்டுநூல் தயார் செய்வார்கள்.

பாலஸ்தீன நாட்டின் மேட்டு நிலங்களில் புல்வெளிகள் இருக்கின்றன. அங்கு சிறுவர்கள் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் மேய்ப்பதைக் காணலாம். இங்குள்ள

அங்கோரா ஆடுகளின் உரோமம் தங்க நிறமாகவும் நேர்த்தியாகவும் இருக்கும். ஆடுகளின் உரோமத்தைச் சேகரித்து வெளி நாடுகளுக்கு அனுப்புகிறார்கள்.

பாலஸ்தீன நாட்டில் சில இடங்களில் யூதர்கள் குடியேறியிருக்கின்றனர். அந்த இடங்களில் பல கைத்தொழில்கள் நடைபெறுகின்றன. அங்கு எண்ணெய் ஆட்டுவதற்கும், சோப்பு, கண்ணாடி முதலியன செய்வதற்கும், ஜமக்காளம், பட்டு முதலியன நெய்வதற்கும் பல தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன.

### கேள்விகள்

1. யாகோப்பின் மாமன் தோட்டங்களில் என்ன பயிர் செய்கிறார்?
2. ஆலிவ் மரம், முசுக்கட்டை மரம் இவற்றின் உபயோகம் என்ன?
3. பாலஸ்தீன நாட்டின் எப்பாகங்களில் ஆட்டு மந்தைகள் மேய்க்கப்படுகின்றன?
4. யூதர்கள் குடியேறியுள்ள இடங்களில் என்ன தொழில்கள் நடைபெறுகின்றன?

### பயிற்சி

அத்தி, ஆரஞ்சு, திராக்ஷை முதலிய பழங்களின் படங்களை வரையவும். அவைகளைப் போல் களிமண்ணால் செய்யவும்.

# 13. ஸ்விட்ஸர்லாந்து நாட்டுச் சிறுவர்கள்-1

ஐரோப்பாக் கண்டத்தில் ஸ்விட்ஸர்லாந்து என்று ஒரு நாடு இருக்கிறது. அது மலைகள் நிறைந்த நாடு. பள்ளத் தாக்குகளில் சிறு சிறு கிராமங்கள் உண்டு. ஒரு கிராமத்தில் பிராங்க் என்னும் ஒரு சிறுவன் வசிக்கிறான்.

பிராங்க் வசிக்கும் வீட்டின் கீழ்ப்பாகம் கற்களாலும், மேற்பாகம் மரக்கட்டைகளாலும் கட்டப்பட்டிருக்கும். வீட்டின் மேற்பாகத்தில் பிராங்கும் அவனுடைய பெற்றோர்களும் வசிப்பார்கள். கீழ்ப் பாகத்தில் முன்வாசல் பக்கமாக உலர்த்தப் பட்ட புல்லைச் சேகரித்து வைப்பார்கள். பின் வாசல் பக்கமாக மாடுகளை அடைத்துக் கொள்வார்கள். வீட்டின் மேற்பாகத்தைச் சுற்றிலும் வராண்டா இருக்கும். வீட்டின் கூரையைக் காற்றுத் தூக்கித் தள்ளாதபடி அதன் மீது பருமனான கற்களை வைத்திருப்பார்கள்.



பிராங்கின் தகப்பனுக்கு மாடுகளை வளர்ப்பதுதான் முக்கிய தொழில். குளிர்காலத்தில் அவர் மாடுகளைத் தம் வீட்டின் கீழ்ப் பாகத்திலுள்ள தொழுவத்தில் அடைத்துத் தீவனம் போட்டுக் காப்பாற்றுவார். பிராங்கின் தகப்பனார் மிருதுவான மரத் துண்டுகளைக் கத்தியால் சீவி பொம்மைகள், விளையாட்டுச் சாமான்கள் முதலியன செய்வார். பிராங்கும் பொம்மைகள் செய்யப் பழகுவான். பிராங்கின் சகோதரிகள் சில பொம்மைகளை எடுத்துக்கொள்வார்கள். அவைகளுக்கு



உடைகளைத் தைத்துப் போட்டு அவைகளை வைத்து விளையாடுவார்கள். பிராங்கின் தகப்பனர் மற்றப் பொம்மைகளை விற்றுப் பணம் சம்பாதிப்பார். பிராங்கின் தாயாருக்கும் சகோதரிகளுக்கும் ஜரிகை வேலை தெரியும். அவர்கள் குடும்பத்திற்கு வேண்டிய உடைகளைத் தைப்பார்கள்.



பிராங்கும் அவனுடைய சகோதரர்களும் பனி உறைந்த சரிவுகளில் சறுக்கி விளையாடுவார்கள். அவர்கள் கால்களில் சறுக்குக் கட்டைகளை மாட்டிக்கொண்டு சறுக்கிச் சறுக்கி நடப்பார்கள். இவ்விதம் சூரியன் மறையும் வரை விளையாடின பிறகு வீட்டிற்குத் திரும்புவார்கள். அவர்கள் வீட்டிற்கு வந்ததும் அவர்களுடைய தாயார் அவர்களுக்குச் சூடான தேயிலைப் பானம் கொடுப்பாள்; ரொட்டி கொடுப்பாள். அவர்கள் ஆகாரம் உட்கொண்ட பிறகு நெருப்பின் பக்கத்தில் உட்கார்ந்து குளிர் காய்வார்கள். அப்பொழுது அவர்களுடைய பாட்டி கதை சொல்லுவாள்.

### கேள்விகள்

1. பிராங்க் வசிக்கும் வீடு எவ்விதமானது ?
2. வீட்டுக் கூரையின் மீது பருமனன கற்களை வைத்திருப்பதின் காரணம் என்ன ?
3. குளிர் காலத்தில் பிராங்கின் தகப்பனர் ஓய்வு வேளைகளில் என்ன வேலை செய்வார்?
4. குளிர் காலத்தில் பிராங்கும் அவனுடைய சகோதரர்களும் என்ன விளையாட்டுக்களை விளையாடுவார்கள் ?

### பயிற்சி

பிராங்க் வசிக்கும் வீட்டைப் போல படம் வரைக.

## 14. ஸ்விட்ஸர்லாந்து நாட்டுச் சிறுவர்கள்—2

கோடை காலத்தில் பிராங்கின் தகப்பனர் தம் குடும்பத்துடனும் ஆடு மாடுகளுடனும் மலைச் சரிவுகளிலுள்ள

புல் வெளிகளுக்குச் செல்லுவார். அங்கு அவர் மரக் கட்டைகளால் ஒரு குடிசை கட்டிக்கொண்டு அதில் வசிப்பார். பிராங்க் மாடுகளை மேய்த்து வருவான்.



பிராங்கின் தந்தையும் சகோதரர்களும் புல் அறுப்பார்கள்; உலர்த்துவார்கள்; வண்டியில் ஏற்றி வீட்டிற்குக் கொண்டு போவார்கள்.

பிராங்கின் பசுக்கள் நல்ல பாலை நிறையக் கொடுக்கின்றன. இங்கு பாலிலிருந்து வெண்ணெய், பாலடைக்கட்டி, சாக்லேட் தயார் செய்கிறார்கள். பாலைப் பக்குவப்படுத்தி டப்பாக்களில் அடைத்து வெளி இடங்களுக்கு அனுப்புகிறார்கள்.

பிராங்கினிடம் நீளமான ஒரு ஊது கொம்பு உண்டு. தூரத்தில் புல் அறுத்துக் கொண்டிருக்கும் தன் சகோதரர் அல்லது தந்தையைக் கூப்பிட வேண்டுமானல் அவன் அந்தக் கொம்பை ஊதுவான். அவர்கள் தம்மிடமுள்ள ஊது கொம்பை ஊதிப் பதில் கொடுப்பார்கள்.

பிராங்க் வசிக்கும் பிரதேசத்தின் இயற்கைக் காட்சிகள் மிகவும் அழகாக இருக்கும். இவைகளைக் காண, பிரயாணிகள் வந்து கொண்டிருப்பார்கள். அவர்கள் பனி மூடிய மலைச் சரிவுகளில் ஏறிச் செல்லுவார்கள்; ஹோட்டல்களில் தங்கி உல்லாசமாகக் காலங் கழிப்பார்கள் ; பனிக்கட்டிகளின் மீது சறுக்கி விளையாடி நேரம் போக்குவார்கள்.

கேள்விகள்

1. கோடை காலத்தில் பிராங்கும் அவனுடைய பெற்றோர்களும் எங்கு வசிப்பார்கள் ?
2. பாலிலிருந்து தயாரிக்கப்படும் பொருள்கள் எவை ?

பயிற்சி

பனி மூடிய சரிவுகளில் பிரயாணிகள் ஏறுவது போன்ற காட்சியை அமைக்கவும்.

———

## 15. தஞ்சாவூருக்குப் பக்கத்தில் வசிக்கும் குடியானவச் சிறுவன்—1

பிள்ளைகளே, நீங்கள் தஞ்சாவூர் பொம்மைகளைப் பார்த்து இருப்பீர்கள். தஞ்சாவூர் நமது சென்னை மாகாணத்தி லுள்ள பெரிய பட்டணங்களுள் ஒன்று. இப்பட்டணம் காவிரியாற்றின் டெல்டாப் பிரதேசத்தில் இருக்கிறது. தஞ்சாவூர் இப் பெயர் கொண்ட ஜில்லாவின் முக்கிய பட்டணம்.

தஞ்சாவூரின் பக்கத்தில் அநேக கிராமங்கள் இருக்கின்றன. ஒரு கிராமத்தில் **முனியன்** என்று ஒரு சிறுவன் இருக்கிறான். அவன் ஒரு கூரை வீட்டில் வசிக்கிறான். அந்த வீட்டின் முன்புறத்தில் திண்ணைகள் உண்டு. முனியனுடைய பெற்றோர்கள் ஏழைகள். அவர்கள் வீட்டில் மண் பாண்டங்களையும் சில பித்தளைப் பாத்திரங்களையும் உபயோகிக்கிறார்கள்.



முனியனின் தகப்பனுருக்குப் பயிரிடுவதுதான் முக்கிய வேலை. இவ்விதம் பயிர்த் தொழில் செய்கிறவர்களுக்குக்

குடியானவர்கள் என்று பெயர். முனியனின் தகப்பனர் வயல்களில் நெல் பயிரிடுவார். அவர், அறுவடையான நெல்லை படத்தில் காட்டியது போன்ற களஞ்சியத்தில் சேர்த்து வைப்பார்.



முனியனின் தகப்பனர் ஒரு கொடிக்கால் போட்டிருக்கிறர். அதில் வாழை, வெற்றிலை, மிளகாய் முதலியன பயிர் செய்திருக்கிறர். தஞ்சாவூர் மிளகாய் பருமனுக இருக்கும். அதைக் குடமிளகாய் என்பார்கள். தஞ்சாவூர் வெற்றிலை பெரியதாகவும் ருசியாகவும் இருக்கும்.

முனியனின் தகப்பனர் ஒரு ஜோடி காளை மாடுகளையும், சில பசுக்களையும், எருமைகளையும், ஆடுகளையும், கோழிகளையும் வளர்க்கிறர். முனியனின் தாயார் பால் கறந்து விற்பாள். பாலிலிருந்து தயிர், வெண்ணெய், மோர், நெய் முதலியன தயார் செய்து விற்பாள். முனியன் ஆடு, மாடுகளை மேய்ச்சல் தரைகளுக்கு ஓட்டிச் சென்று மேய்த்து வருவான்.



கேள்விகள்

1. தஞ்சாவூர் எந்த நதிப் பிரதேசத்தில் இருக்கிறது?
2. முனியனின் தகப்பனர் என்ன தொழில் செய்துவருகிறர்?
3. முனியனின் தாயார் பாலைக் கறந்து என்ன செய்வாள்?

பயிற்சி

குடமிளகாய், வெற்றிலை இவைகளின் படங்களை வரைக.

## 16. தஞ்சாவூருக்குப் பக்கத்தில் வசிக்கும் குடியானவச் சிறுவன்—2



முனியனின் தகப்பனுர் நெல், வைக்கோல், வாழை இலை, வாழைக் காய் முதலியவைகளைத் தம் வண்டியில் தஞ்சாவூருக்கு விற்கக் கொண்டு போவார். அச்சமயங்களில் முனியனும் தன் தகப்பனுருடன் தஞ்சாவூருக்குப் போவான்.

முனியன் தஞ்சாவூரிலுள்ள பெரிய கட்டடங்களைப் பார்த்து ஆச்சரியப்படுவான். அங்குள்ள பிரஹதீஸ்வரர் கோயிலையும், அரண்மனையையும் போய்ப் பார்ப்பான். உல்லாசத் தோட்டத்திற்குச் சென்று உலாவுவான். அங்குள்ள ரேடியோமூலம் பாட்டுக்களைக் கேட்டுச் சந்தோஷப்படுவான். பள்ளிக்கூடங்களில் சிறுவர்களும் சிறுமிகளும் படிப்பதைப் பார்த்து அவனும் படிக்க ஆசைப்படுவான்.



முனியனின் தகப்பனுர் தாம் விற்கக் கொண்டு வந்த சாமான்களை விற்பார்; அப்பணத்துக்கு தம் வீட்டிற்கு வேண்டிய சாமான்கள், துணிகள் முதலியன வாங்கிக் கொள்வார்; முனியனுடன் ஊருக்குத் திரும்புவார்.

இவர்களுக்கு அரிசி, காய்கறிகள், தயிர், மோர், முட்டை முதலியன முக்கிய ஆகாரப் பொருள்கள். இவர்கள் மீன், ஆட்டிறைச்சி இவைகளைச் சில சமயங்களில் சாப்பிடுவார்கள்.

முனியனுக்கும் அவன் வீட்டிலுள்ள மற்றவர்களுக்கும் அதிக ஆடைகள் தேவை இல்லை. முனியன் ஒரு துண்டு மட்டும் உடுத்திக்கொள்வான். அவனுடைய தகப்பனர் ஒரு வேஷ்டியை மடித்துக் கட்டிக்கொண்டு தோளில் ஒரு துணியைப் போட்டுக்கொள்வார். முனியனின் தாயார் நீளமான சேலையையும், சகோதரிகள் பாவாடை, சித்தாடை முதலியவைகளையும் அணிந்து கொள்வார்கள்.



முனியனுக்கு கோலி ஆட்டம், பம்பரம் சுற்றவிடுதல், காற்றாடி பறக்கவிடுதல் முதலிய விளையாட்டுக்களில் பிரியம் அதிகம்.

அவனுடைய சகோதரிகள் பாண்டி விளையாடுவார்கள்; பொம்மைகளை வைத்து விளையாடுவார்கள்.

கேள்விகள்

1. முனியனின் தகப்பனர் தஞ்சாவூருக்கு விற்கக் கொண்டுபோகும் சாமான்கள் எவை?
2. முனியன் தஞ்சாவூரில் என்னென்ன இடங்களைப் போய்ப் பார்ப்பான்?
3. முனியனுடைய தகப்பனர் தஞ்சாவூரிலிருந்து தம் வீட்டிற்கு என்ன சாமான்களை வாங்கிக்கொண்டு வருவார்?
4. முனியனுக்குப் பிரியமான விளையாட்டுக்கள் எவை?

பயிற்சி

ஒரு பொம்மைக்கு தஞ்சாவூர் குடியானவனைப் போல உடைகளை உடுத்தவும்.

## 17. காஷ்மீர நாட்டுச் சிறுவன்-1

இந்தியாவின் வடமேற்கில் **காஷ்மீரம்** என்று ஒரு நாடு இருக்கிறது. அது மலைப்பாங்கானது; அழகான காட்சிகளை உடையது.



காஷ்மீரத்தில் ஜீலம் நதி பாயும் பள்ளத்தாக்கு விசாலமானது; செழிப்பானது. அங்கு **உலார் ஏரி** இருக்கிறது. இப்பள்ளத்தாக்கிலுள்ள ஒரு கிராமத்தில் **ரணசிங்** என்னும் சிறுவன் வசிக்கிறான். அவன் சீக்கிய மதத்தைச்சேர்ந்தவன். அவனும் அவனுடைய பெற்றோர்களும் அழகாக இருப்பார்கள். ஸ்திரீகள் காதுகளில் நகைகளை அணிந்து கொள்வார்கள்; கைகளில் வளையல்களைப் போட்டுக் கொள்வார்கள்.

காஷ்மீரத்தில் கோடை காலத்தில் குளிர்ச்சியாக இருக்கும். குளிர் காலத்தில் அதிகமாகக் குளிரும். ஆகையால் இங்கு எல்லாரும் கம்பளி ஆடைகளை உடுத்திக் கொள்வார்கள்.



ரணசிங்கின் தகப்பனார் சில வெள்ளாடுகளையும், செம்மறியாடுகளையும் வளர்க்கிறார். அவைகளை ரணசிங் மேய்த்துக் கொண்டு வருவான். அந்த ஆடுகளின் உரோமம் நீண்டு வளரும். அந்த உரோமத்தைக் கத்தரித்துக் கம்பளம் நெய்வார்கள். ரணசிங்கின் தாயாருக்கு கைத்தறியில் கம்பளம் நெய்யத் தெரியும். காஷ்மீரத்தில் நெய்யப்படும் கம்பளங்கள் மிகவும் நேர்த்தியாக இருக்கும்.

ரணசிங்கின் தகப்பனுருக்குச் சில வயல்கள் உண்டு. அவை சிறு சிறு வயல்களாக இருக்கும். அவற்றில் நெல் பயிரா கின்றன. ரணசிங்கின் தகப்பனுர் மலைச்சரிவுகளின் ஓரமாக மரக்கட்டைகளையும் கற்களையும் அடுக்கி, மண் சுமந்து வயல் களை அமைத்திருக்கிருர். அந்த வயல்களில் சோளம், கோதுமை முதலியன பயிராகின்றன. இந்த நாட்டில் மழை குறைவு. ஆயினும் பயிர்களுக்குத் தண்ணீர் குறை வின்றிக் கிடைக்கும். மலைச் சிகரங் களிலுள்ள பனி உருகி தண்ணீர் சிறு சிறு ஓடைகளாக ஓடிவரும். அந்த ஓடைகளில் வரும் தண் ணீரை வயல்களுக்குப் பாய்ச்சு வார்கள். ஓடைகளைக் கடந்து செல்ல மரக்கட்டைகளால் பாலங் களை அமைத்துக் கொள்வார்கள்.

ரணசிங்கின் தகப்பனுருக்குச் சில தோட்டங்கள் உள்ளன. அவற்றில் ஆப்பிள், ஆரஞ்சு முதலிய பழமரங்கள், முசுக் கட்டை மரங்கள், புஷ்பச் செடிகள் வளர்கின்றன.

முசுக்கட்டை மரங்களில் பட்டுப்பூச்சிகளை வளர்க்கிருர்கள். ரணசிங்கும் அவனுடைய சகோதரிகளும் பட்டுநூல் எடுப் பார்கள்; ஓய்வு வேளைகளில் மரக்கட்டைகளில் சித்திரங்கள் செதுக்குவார்கள். ரணசிங்கின் சகோதரிகள் புஷ்பங்களைப் பறித்து விற்பார்கள்.

### கேள்விகள்

1. காஷ்மீரம் எங்கு இருக்கிறது? அது எவ்விதமான நாடு?
2. ரணசிங்கின் தகப்பனுர் தம் வயல்களில் என்ன பயிர் செய்கிருர்?
3. ரணசிங், அவனுடைய தாயார், சகோதரிகள் இவர்கள் கவனித்துவரும் வேலைகள் என்ன?

### பயிற்சி

மலைச் சரிவுகளில் வயல்கள் அமைக்கப்படுவது போல களிமண், கற்கள் இவைகளால் மாதிரி செய்து காட்டவும்.

# 18. காஷ்மீர நாட்டுச் சிறுவன் - 2



ஸ்ரீநகர் காஷ்மீரத்தின் தலை நகர். அது ஜீலம் நதிக்குப் பக்கத்தில் உலார் ஏரிக் கரையில் இருக்கிறது. ரணசிங் தன் தகப்பனுருடன் அந்நகரத்திற்குச் சில சமயங்களில் போவது உண்டு. அங்கு பாக் என்ற பூஞ்சோலை இருக்கிறது. அதில் கணக்கற்ற குழாய்களிலிருந்து தண்ணீர் வந்துகொண்டிருக்கும் காட்சி மிக அழகாக இருக்கும். ஸ்ரீநகரில் மரச் சாமான்கள் செய்தல், உலோகத் தகடுகளால் பாத்திரங்கள் செய்தல், நகைகள் செய்தல் முதலிய வேலைகளைச் செய்து பலர் ஜீவிக்கிறுர்கள்.

உலார் ஏரியின் மீது பல ஜனங்கள் படகு வீடுகளில் வசிக்கிறுர்கள். இவர்கள் பழைய படகுகளைச் சேர்த்துக் கட்டி, அவற்றில் மண்ணைச் சுமந்து, தோட்டம் அமைப்பது உண்டு. இவ்விதத் தோட்டங்களை மிதக்கும் தோட்டங்கள் என்பர். இத் தோட்டங்கள் திருடு போவதும் உண்டு.

கேள்விகள்

1. எங்கு ஜனங்கள் படகு வீடுகளில் வசிக்கிறுர்கள்?
2. மிதக்கும் தோட்டங்கள் என்றுல் என்ன?

பயிற்சி

ரணசிங் ஸ்ரீநகரைப் பற்றி உன்னிடம் சொல்லுவது போல நீ சொல்லு.

## 19. வங்காளத்தில் நிலக்கரி வயல்களில் வசிக்கும் சிறுவர்கள்-1

பிள்ளைகளே, நீங்கள் நிலக்கரியைப் பார்த்திருக்கிறீர்களா? அது பெரிய பெரிய பாளங்களாக பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்படுகிறது. நிலக்கரியின் உபயோகத்தைச் சொல்லுங்கள்.



நமது இந்தியா தேசத்தின் வடகிழக்குப் பாகத்தில் **வங்காளம்** என்று ஒரு மாகாணம் இருக்கிறது. அங்கு தாமோதர் நதிப் பள்ளத்தாக்கில் அநேக நிலக்கரி வயல்கள் உள்ளன.

சந்திரநாத் என்னும் ஒரு சிறுவனுடைய பெற்றோர்கள் ஒரு நிலக்கரி வயலில் வேலை செய்து வருகிறார்கள். அந்த நிலக்கரி வயலில் வேலை செய்யும் கூலியாட்களுக்கு அங்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. அவ்வீடுகளின் சுவர்களை மண்ணாலும் மூங்கில்களாலும் கட்டியிருப்பார்கள்; கூரைகளுக்குத் தகரம் போட்டிருப்பார்கள். அவ்வீடுகளில் ஒன்றில் சந்திர நாத்தும் அவனுடைய பெற்றோர்களும் வசிக்கிறார்கள்.

அதிகாலையில் அங்கு குழல் ஊதுவார்கள். குழல் சப்தம் கேட்டவுடன் கூலியாட்கள் சென்று ஆஜர் கொடுப்பார்கள். பிறகு வேலை செய்ய ஆரம்பிப்பார்கள். ஆண்கள் சுரங்கங்களில் நிலக்கரியைப் பெயர்த்து எடுப்பார்கள்.

சிறுவர்கள் அவர்களுக்கு உதவி செய்வார்கள். பூமிக்குள்ளிருந்து வெட்டி மேலே கொண்டுவரப்படும் நிலக்கரியை ஸ்திரீகள் தட்டுகளில் அள்ளி டிராலி வண்டிகளில் கொட்டுவார்கள். அவ்வண்டிகளைச் சில கூலியாட்கள் தள்ளிச் சென்று, நிலக்கரியை ஓரிடத்தில் குவிப்பார்கள்.



மாலையில் குழல் சப்தம் கொடுத்ததும் வேலை நிறுத்தப்படும். கூலியாட்கள் வீடுகளுக்குத் திரும்புவார்கள். அப்பொழுது அவர்களின் உடம்பும், ஆடைகளும் கரி படிந்து இருக்கும். அவர்கள் வீடுகளுக்குச் சென்று ஸ்நானம் செய்து வேறு உடைகளை உடுத்திக் கொள்வார்கள். ரொட்டி, பால், பழம் இவைகளைச் சாப்பிடுவார்கள்.

சந்திர நாத் ஒரு பள்ளிக்கூடத்தில் படித்து வருகிறான். அவன் உங்களைப் போல் மூன்றாவது வகுப்பில் படிக்கிறான். அவன் வங்காள பாஷை பேசுகிறான். அவனுக்கு வங்காள பாஷையில் படிக்கவும் எழுதவும் தெரியும். தவிர, அவன் ஆங்கிலமும் பொது அறிவுப் பாடங்களும் படித்து வருகிறான். மாலை வேளைகளில் அவன் மற்றச் சிறுவர்களுடன் பந்து விளையாடுவான்; காற்றாடி பறக்க விடுவான்.

சந்திரநாத் பெரியவனானதும் நிலக்கரிச் சுரங்கங்களில் வேலை செய்யப் போவான்.

கேள்விகள்

1. வங்காளத்தில் எந்த நதிப் பள்ளத்தாக்கில் நிலக்கரி கிடைக்கிறது?
2. சந்திர நாத்தின் பெற்றோர்கள் என்ன வேலைகளைச் செய்கிறார்கள்?

பயிற்சி

நிலக்கரித் துண்டு ஒன்றைப் பள்ளிக்கூடக் காட்சி சாலையில் சேர்க்கவும்.

## 20. வங்காளத்தில் நிலக்கரி வயல்களில் வசிக்கும் சிறுவர்கள்–2

சந்திர நாத்தின் தகப்பனர் நிலக்கரியை வெட்டி எடுக்க பூமிக்கு அடியில் அதிக ஆழம் வரை செல்லவேண்டும். அந்த வழி ஒரு கிணறு போல் கிடங்காக இருக்கும்.



அவரும் மற்றும் அவருடன் வேலை செய்கிறவர்களும் படத்தில் காட்டியது போன்ற விளக்குகளை யும் ஆயுதங்களையும் எடுத்துக் கொள்வார்கள். பூமிக்குள் இறங்கு வதற்காக அமைக்கப்பட்ட வாச லின் பக்கத்தில் வருவார்கள். அங்கு ஒரு கூண்டு இருக்கும். அதில் ஏறி நிற்பார்கள். மின்சாரத்தின் சக்தியால் அந்தக் கூண்டு கீழே இறங்கும். அது விலாசமான ஒரு இடத் திற்குப் போய் நிற்கும். கூலியாட்கள் கூண்டைவிட்டு இறங்குவார்கள். பிறகு கூண்டு மேலே சென்றுவிடும். அந்த அறையில் பல மின்சார விளக்குகள் ஜ்வலித்துக் கொண்டிருக்கும்.

கூலியாட்கள் போய்ச் சேர்ந்த அறையிலிருந்து பல திசைகளிலும் சிறிய வழிகள் செல்லும். சந்திர நாத்தின் தகப்பனரும் சில கூலியாட்களும் ஒரு வழியைப் பற்றிச் செல்லுவார்கள். அவ்வழி இருட்டாக இருக்கும். அவர்கள் எடுத்துச் செல்லும் விளக்குகளால் வழி அறிந்து கொள் வார்கள். வழியில் சில இடங்களில் கூரையிலிருந்து தண் ணீர் கசிந்து சொட்டுச் சொட்டாக விழுந்துகொண்டிருக்கும்.

சந்திர நாத்தின் தகப்பனர் கரி வெட்டவேண்டிய இடத்தை அடைவார். அந்த இடத்தின் கூரையைத்

தட்டிப் பார்த்து அது உறுதியாக இருக்கிறதா என்று கவனிப்பார். சில சமயங்களில் கூரை விழுந்து கூலியாட்கள் இறந்து போவதும் உண்டு.

சந்திர நாத்தின் தகப்பனர் கூரையைத் தாங்கும்படி சில தடைகளை வைப்பார். விளக்கைக் கையில் தூக்கிப் பிடித்துக்கொண்டு வேலை செய்ய ஆரம்பிப்பார். நிலக்கரியை கூந்தாலி, கோடாலி முதலிய ஆயுதங்களால் பெரிய பெரிய பாளங்களாகப் பெயர்த்து எடுப்பார். அவருடன் ஒரு பையனும் வேலை செய்வான்.



அவன் மரப்பிடி வைத்த ஒரு பெரிய இரும்புக் கரண்டியால் கரியை அள்ளி ஒரு தள்ளு வண்டியில் கொட்டுவான்.

அந்த வண்டியை மின்சாரக் கூண்டுள்ள இடத்திற்குக் கொண்டு வருவார்கள். இவ்வித வண்டிகள் ஓட அங்கு தண்டவாளங்கள் பதிக்கப்பட்டிருக்கும். மின்சாரக் கூண்டின் மூலம் கரியை மேலே அனுப்புவார்கள். பிறகு கரியை டிராலி வண்டிகளில் எடுத்துச் சென்று ஓரிடத்தில் குவிப்பார்கள்.

வங்காளத்தில் சில இரும்புச் சாலைகள் இருக்கின்றன. அவற்றில் பல இரும்புச் சாமான்களைச் செய்கிறார்கள்.

### கேள்விகள்

1. கூலியாட்கள் நிலக்கரி வெட்டி எடுக்கப்படவேண்டிய இடங்களுக்கு எவ்விதம் போய்ச் சேருவார்கள்?
2. நிலக்கரி வெட்ட ஆரம்பிப்பதற்கு முன்பு கூலியாள் என்ன செய்வான்?
3. நிலக்கரி வயல்களில் ஸ்திரீகள் செய்துவரும் வேலைகள் என்ன?

### பயிற்சி

நிலக்கரி வெட்டியெடுப்பவர்கள் உபயோகிக்கும் ஆயுதங்கள், விளக்கு இவைகளைப் போல் படங்கள் வரையவும்.

# 21. ஒரு படகச் சிறுவன் - 1

தென் இந்தியாவில் நீலகிரி என்று ஒரு மலை இருக்கிறது. இந்த மலைச் சரிவுகளில் படகர் என்னும் ஜாதியார்கள் வசிக்கிறார்கள். ஈனன் என்பவன் ஒரு படகச் சிறுவன். அவனுடைய வீடு ஒரு சிறிய குடிசை. அதன் கூரை சாமை வைக்கோலால் வேயப்பட்டிருக்கிறது. அக்குடிசை மிகவும் தாழ்ந்து இருக்கும். ஈனன் வசிக்கும் பிரதேசத்தில் கோடை காலத்தில் கூட அதிகக் குளிர்ச்சியாக இருக்கும். ஆகையால் அவனுடைய வீட்டிற்கு ஜன்னல்கள் வைக்கப்படவில்லை.

ஈனன் இடுப்பில் ஒரு சிறு துண்டைக் கட்டிக்கொள்வான். நீளமான ஒரு போர்வையால் உடம்பைப் போர்த்திக் கொள்வான். அவனுடைய தகப்பனாரும் அவனைப் போலவே உடுத்திக்கொண்டு தலையில் ஒரு முண்டாசு கட்டிக் கொள்வார். அவர் வெளியில் செல்லும் பொழுது ஒரு தடிக் கம்பை எடுத்துச் செல்லுவார்.

ஈனனின் தாயார் அகலமான ஒரு துணியின் ஒரு தலைப்பைக் கட்டிக்கொண்டு, மற்றொரு தலைப்பால் உடம்பைப் போர்த்திக் கொள்வாள். அவள் கைகளில் வெள்ளிக் காப்புகளை அணிந்திருப்பாள். நெற்றியில் பச்சை குத்திக் கொண்டிருப்பாள்.

படகர் மலைச்சரிவுகளில் வசிப்பதால் கஷ்டப்பட்டு வேலை செய்ய வேண்டியிருக்கும். ஆகையால், அவர்கள் தைரியசாலிகளாக இருப்பார்கள்.

கேள்விகள்

1. படகர்கள் எங்கு வசிக்கிறார்கள்?
2. அவர்கள் எவ்விதம் உடைகளை அணிகிறார்கள்?

பயிற்சி

படகர் வசிக்கும் வீட்டைப் போல் படம் வரைக.

# 22. ஒரு படகச் சிறுவன் - 2

ஈனன் வசிக்கும் கிராமத்தைச் சுற்றிலும் சில வயல்கள் இருக்கின்றன. ஈனனின் தகப்பனர் தம் வயல்களில் கேழ் வரகு, வாற்கோதுமை, சாமை முதலிய தானியங்களைப் பயிர் செய்து வருவார். ஈனன் தகப்பனருக்கு உதவி செய்வான். அவன் ஆடுமாடுகளைப் புலன்களுக்கு ஓட்டிச் சென்று மேய்த்து வருவான். ஈனனின் தாயார் சமையல் செய்தல் முதலிய வீட்டு வேலைகளைக் கவனிப்பாள்.



ஈனன் வசிக்கும் ஊரின் மத்தியில் கற்களாலும் மண்ணாலும் உயர்த்தப்பட்ட ஒரு மேடை உண்டு. மாலை வேளைகளில் அந்த ஊர் மனிதர்கள் அங்கு உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பார்கள்.

படகர்கள் தெய்வ பக்தியுள்ளவர்கள். அவர்கள் மாரியம்மனை முக்கியமாக வணங்கி வருகிறார்கள். அவர்கள் பெரியவர்களிடம் மிகவும் மரியாதையாக இருப்பார்கள். பெரியோர்களின் பாதங்களைத் தம் தலையின் மீது வைத்து வணங்குவார்கள்.

சில படகர்கள் மலைச் சரிவுகளிலுள்ள காப்பி, தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்து வருகிறார்கள்.

### கேள்விகள்

1. படகர் வயல்களில் என்ன பயிர் செய்கிறார்கள்?
2. படகச் சிறுவர்கள் கவனிக்கும் வேலை என்ன?
3. படகர் மாலை நேரங்களை எவ்விதம் போக்குவார்கள்?

### பயிற்சி

சில பொம்மைகளுக்கு படகர்களைப் போல் உடை உடுக்கவும்.

## 23. பர்மா தேசத்துச் சிறுவர்கள்-1

நமது இந்தியா தேசத்திற்குக் கிழக்கில் **பர்மா** என்று ஒரு தேசம் இருக்கின்றது. அது மலைப்பிரதேசமானது. நதிகளின் பள்ளத்தாக்குகளில் கிராமங்கள் இருக்கின்றன. ஒரு கிராமத்தில் **மாங் ஆபி** என்னும் சிறுவன் வசிக்கிறான்.



மாங் ஆபி பரண்மீது கட்டப்பட்ட வீட்டில் வசிக்கிறான். மூங்கில்களால் பின்னப்பட்ட தட்டிகள் தான் வீட்டின் சுவர்கள் ஆகும். வைக்கோல் அல்லது புல்லால் வீட்டின் கூரை வேயப்பட்டிருக்கும். மாங் ஆபி வசிக்கும் பிரதேசத்தில் பாம்புகள் அதிகம். மழை காலங்களில் நதிகளில் வெள்ளம் ஏற்பட்டுத் தண்ணீர் கரை புரண்டு ஓடும். இக்காரணங்களால் தான் இங்குள்ள ஜனங்கள் பரண் வீடுகளில் வசிக்கிறார்கள்.

மாங் ஆபி இடுப்பில் **லூஞ்சி** எனப்படும் ஒரு துண்டை உடுத்திக்கொள்வான். **எஞ்சி** என்ற சட்டையைப் போட்டுக் கொள்வான். தலையில் ஒரு தலைக் குட்டையைக் கட்டிக் கொள்வான். மாங் ஆபியைப் போலவே அவனுடைய தாயாரும் சகோதரிகளும் உடுத்திக் கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்கள் தலைமயிரை வாரி உச்சியில் முடிந்து ஒரு சீப்பையாவது, புஷ்பங்களையாவது வைத்துக்கொள்வார்கள்.

அவர்கள் வெளியில் செல்லும் பொழுது குடை, விசிறி இவைகளை எடுத்துக்கொண்டு போவார்கள்; கால்களில் செருப்பு அல்லது கட்டை போட்டுக்கொள்வார்கள்.

மாங் ஆபியின் தகப்பனுருக்குச் சில வயல்கள் உண்டு. அவர் அந்த வயல்களில் நெல் பயிர் செய்கிறுர். அவர் தம் வீட்டில் சில எருமை மாடு களை வளர்க்கிறுர். உழவு காலங் களில், மாங் ஆபி அதிகாலையில்

எருமைகளை வயலுக்கு ஓட்டிச் செல்லுவான். அப்பொழுது அவன் ஒரு எருமையின்மீது ஏறிக்கொண்டு போவான். அவனும் அவனுடைய தகப்பனுரும் எருமைகளை ஏர்களில் பூட்டி வயலை உழுவார்கள். ஒரு ஏரில் ஒரு எருமைதான் பூட்டப்படும்.

நடவு காலத்தில் வெயில் அதிகமாக இருக்கும். அப்பொழுது வயல்களில் வேலை செய்கிறவர்கள் வைக்கோலால் செய்யப்பட்ட அகலமான தொப்பிகளைத் தலை களில் வைத்துக்கொள்வார்கள். அறுவடை காலங்களில் குடும்பத் திலுள்ள ஆண்களும் பெண்களும் வயல்களில் வேலை செய்வார்கள்.

### கேள்விகள்

1. மாங் ஆபியின் வீடு பரண் மீது கட்டப்பட்டிருப்பது ஏன்?
2. மாங் ஆபி எவ்விதமான உடைகளை உடுத்திக்கொள்கிறுன்?
3. பர்மியர் வயல்களை எவ்விதம் உழுகிறுர்கள்?

### பயிற்சி

1. மாங் ஆபியின் வீட்டைப் போல் ஒரு மாதிரி செய்யவும்.
2. பர்மிய ஸ்திரீகள் உபயோகிக்கும் குடை, விசிறி இவைகளைப் போல் படங்கள் வரையவும்.

# 24. பர்மா தேசத்துச் சிறுவர்கள்-2



மாங் ஆபி பௌத்த மதத்தைச் சேர்ந்தவன். அவனுடைய ஊரில் ஒருகோவிலும் ஒரு மடமும் உண்டு. பௌத்தர்களின் கோயிலுக்குப் பகோடா என்று பெயர். கோயில் கோபுரங்களில் மணிகள் கட்டப்பட்டிருக்கும். அவை காற்றில் அசைந்து ஓசையை உண்டு பண்ணும்.

மடத்தில் சந்நியாசிகள் வசிப்பார்கள். அவர்கள் தலையை வழுக்க மொட்டை அடித்திருப்பார்கள்; மஞ்சள் நிற ஆடையை உடுத்தியிருப்பார்கள். வீடுதோறும் போய்ப் பிச்சை எடுத்துச் சாப்பிடுவார்கள். ஜனங்கள் அவர்களுக்குச் சோறு, மாமிசம்,மீன்,பழங்கள் இவைகளைப் பிச்சையாகப் போடுவார்கள். மடம்தான் அந்தக் கிராமத்தின் பள்ளிக்கூடம். சந்நியாசிகள் அங்கு வரும் சிறுவர்களுக்குப் பாடம் கற்பித்து வருவார்கள்.

பர்மியச் சிறுவர்களுக்கு எட்டாவது வயதில் பச்சை குத்தப்படும். அவர்கள் இடுப்பு முதல் முழங்கால்கள் வரை பச்சை குத்திக் கொள்வார்கள்.

பர்மியர் பேசும் பாஷைக்கு **பர்மீஸ்** என்று பெயர். மாங் ஆபிக்கு பர்மீஸ் பாஷையில் நன்ருகப் பேசத் தெரியும்.

பர்மியர் சிறிது மஞ்சள் நிறமாகக் காணப்படுவார்கள். அவர்களுடைய முகம் தட்டையாக இருக்கும். அவர்கள் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள்.

மலைச்சரிவுகளில் காடுகள் இருக்கின்றன. அக்காடுகளில் யானைகளும், புலி முதலிய துஷ்ட மிருகங்களும் வசிக்கின்றன. மலைச்சரிவுகளில் வசிப்பவர்கள் தங்கள் வீடுகளில் துஷ்ட மிருகங்கள் நுழையாதபடி சுற்றிலும் மரவேலி அல்லது இரும்பு வேலியைப் போட்டுக் கொள்வார்கள். மலைச்சரிவுகளிலுள்ள காடுகளில் தேக்கு மரங்கள் விசேஷமாக வளர்கின்றன. பர்மியர் காடுகளிலுள்ள தேக்கு மரங்களை வெட்டி, தெப்பமாகக் கட்டி, நதிகளில் மிதக்கவிட்டு வேறு இடங்களுக்கு அனுப்புகிருர்கள்.



மரத்துண்டுகளை இழுத்துச் செல்லுதல், தூக்கி அடுக்குதல் முதலிய வேலைகளைப் பழக்கப்பட்ட யானைகள் செய்யும். நாம் உபயோகிக்கும் தேக்கு மரக் கட்டைகளில் பெரும்பாலனவை பர்மா தேசத்திலிருந்து வந்தவைகளே.

தவிர, பர்மாவிலிருந்து நம் நாட்டிற்கு அரிசி, மண்ணெண்ணெய், பெட்ரோல் முதலியனவும் வருகின்றன. நம் நாட்டுக் கடைகளில் விற்கப்படும் ரங்கூன் அரிசி பர்மா தேசத்திலிருந்து வருவதே ஆகும்.

### கேள்விகள்

1. பௌத்த சந்நியாசிகள் எவ்விதம் வாழ்ந்து வருகிருர்கள்?
2. யானைகளை என்ன வேலைகளைச் செய்ய உபயோகிக்கிருர்கள்?
3. பர்மாவிலிருந்து நம் நாட்டிற்கு வரும் முக்கியமான மூன்று பொருள்களைச் சொல்லு.

### பயிற்சி

யானைகள் மரக்கட்டைகளை அடுக்குவது போன்ற காட்சியை அமைத்துக் காட்டவும்.

# 25. ஒரு ரூபாய் நாணயம்

பிள்ளைகளே, நீங்கள் ரூபாய் நாணயத்தைப் பார்த்திருப்பீர்கள். அதன் வடிவம் என்ன? அது வட்டமாக இருக்கிறது. அதன் ஒருபக்கத்தில் அரசரின் தலை உருவம் காணப்படும். அந்த அரசரின் பெயர் நாணயத்தின் ஓரமாக அச்சிடப்பட்டிருக்கிறது. அடுத்த பக்கத்தின் மத்தியில் நாணயத்தின் மதிப்பு, அது அச்சிடப்பட்ட வருஷம் முதலியன குறிக்கப்பட்டுள்ளன. சுற்றிலும் கொடிகள் செதுக்கப்பட்டுள்ளன. நாணயத்தின் விளிம்பில் வரிகளும், பள்ளங்களும் இருக்கின்றன. பழைய ரூபாய் நாணயம் வெள்ளியால் செய்யப்பட்டது; புது ரூபாய் நாணயம் வெள்ளியும் வெங்கலமும் கலந்து செய்யப்பட்டது.

புது ரூபாய் நாணயத்தில் ஆறும் ஜார்ஜ் அரசரின் தலை உருவம் அச்சிடப்பட்டுள்ளது. ஆறும் ஜார்ஜ் அரசர் நமது சக்கரவர்த்தி. இவர் இங்கிலாந்து தேசத்தில் லண்டன் நகரத்தில் வசிக்கிறார்.

அரை ரூபாய், கால் ரூபாய், இரண்டணா, ஒரு அணா, அரையணா, காலணா, பை நாணயங்களைக் கவனியுங்கள். ஒவ்வொரு நாணயமும் என்ன வடிவம்? எதைக் கொண்டு செய்யப்பட்டது?

ஒரு ரூபாய்க்கு 2 அரை ரூபாய்கள்; 4 கால் ரூபாய்கள்; 8 அரைக்கால் ரூபாய்கள்; 16 அணாக்கள்; 32 அரையணாக்கள்; 64 காலணாக்கள்; 192 பைகள்.

நாணயங்களை அரசாங்கத்தார் அச்சிட்டு வெளியிடுகிறார்கள். நாணயங்களைப் போல நாம் அச்சிடக்கூடாது; செய்தால் தண்டனை கிடைக்கும்.

நாணயங்களைக் கொடுத்து நாம் நமக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக்கொள்கிறோம்.

### கேள்விகள்

1. ரூபாய் நாணயம் எதைக்கொண்டு செய்யப்படுகிறது?
2. ரூபாய் நாணயத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் நீ என்ன பார்க்கிறாய்?
3. நமது அரசரின் பெயர் என்ன? அவர் எங்கு வசிக்கிறார்?

### பயிற்சி

ஒரு ரூபாய்க்குச் சில்லறை மாற்றக் கற்றுக் கொடுத்தல்.

# 26. மோட்டார் வண்டிகள்

இது ஒரு மோட்டார் பஸ்ஸின் படம். பஸ்ஸை ஓட்டுகிறவருக்கு டிரைவர் என்று பெயர். பிரயாணிகளிடம் பணம் வசூலித்து டிக்கட்டுகள் கொடுக்கிறவருக்குக் கண்டக்டர் என்று பெயர். பஸ்ஸுகள் பெட்ரோல் அல்லது கட்டைக் கரி வாயுவின் சக்தியால் ஓடுகின்றன.



இது மோட்டார் கார். சிலர் இது போன்ற மோட்டார் கார்களை வாடகைக்கு விட்டுப் பணம் சம்பாதிக்கிறார்கள். மோட்டார் பஸ்ஸுகள், மோட்டார் கார்கள் இவைகளின் மூலம் சீக்கிரமாகவும், சௌகரியமாகவும் பிரயாணம்செய்ய முடியும்.



இது மோட்டார் லாரி. இதில் சாமான்களை ஏற்றிச் செல்லுவார்கள். அமெரிக்கா முதலிய தேசங்களிலிருந்து மோட்டார் வண்டிகளின் பாகங்கள் நமது தேசத்திற்கு வரவழைக்கப்படுகின்றன. சில கம்பெனிக்காரர்கள் அவைகளை மோட்டார் வண்டிகளாக அமைத்து விற்கிறார்கள்.



### கேள்விகள்

1. மோட்டார் பஸ்ஸுகள் எதன் சக்தியால் ஓடுகின்றன?
2. மோட்டார் வண்டிகள் நமக்கு எங்கிருந்து கிடைக்கின்றன?

### பயிற்சி

மோட்டார் கார், லாரி, பஸ் இவைகளைப் போல் படங்கள் வரைக. இவற்றின் படங்களைச் சேகரிக்க. இவைகளைப் போல் அட்டையால் செய்க.

# 27. பெட்ரோல் எண்ணெய்

மோட்டார் வண்டிகள் பெட்ரோல் எண்ணெயின் சக்தியால் ஓடுகின்றன அல்லவா ? பெட்ரோல் எண்ணெய் நம் தேசத்தில் கிடைக்கவில்லை. அது பர்மா, அமெரிக்கா முதலிய தேசங்களில் கிடைக்கிறது.

அந்தத் தேசங்களில் எண்ணெய் ஊற்றுகள் இருக்கின்றன. பம்புகள் மூலம் எண்ணெயை பூமியிலிருந்து வெளியே எடுக்கிறார்கள். எண்ணெய் நிலையங்களில் அதைச் சுத்தம் செய்து பெட்ரோல், மண்ணெண்ணெய் முதலியன தயார் செய்கிறார்கள். இந்த எண்ணெய்களைக் கப்பல்களின் மூலம் நமது நாட்டிற்கு அனுப்புகிறார்கள். பிறகு ரெயில் வண்டிகளின் மூலம் ஆங்காங்கு உள்ள எண்ணெய்க் கிடங்குகளுக்கு அனுப்புகிறார்கள்.



பட்டணங்களில் மோட்டார் வண்டிகளின் தேவைக்கு வேண்டிய பெட்ரோல் சுலபமாகக் கிடைக்கும்படி ஆங்காங்கு 'பங்குகள்' அமைக்கப்பட்டுள்ளன.



பெட்ரோல் எளிதில் தீப்பற்றிக் கொள்ளும் தன்மை உடையது. ஆகையால் அதன் பக்கத்தில் நெருப்பைக் கொண்டுபோகக் கூடாது.

கேள்விகள்

1. பெட்ரோல், மண்ணெண்ணெய் முதலியன எந்தத் தேசங்களிலிருந்து நம் தேசத்திற்கு வருகின்றன ?

2. அத்தேசங்களிலிருந்து எண்ணெய் எவ்விதம் நமது தேசத்திற்கு அனுப்பப்படுகிறது? நம் தேசத்தின் பல பாகங்களுக்கும் எவ்விதம் எடுத்துச் செல்லப்படுகிறது ?

3. பெட்ரோல் எண்ணெயின் உபயோகம் என்ன ?

பயிற்சி

பெட்ரோல் எண்ணெய் விற்கப்படும் இடங்களைப் போய்ப் பார்க்கவும்.

# 28. நெல்



நெல் பயிர் வண்டல்மண் நிலங்களில் நன்றாக வளரும். அதற்கு அதிக உஷ்ணமும், அதிகத் தண்ணீரும் வேண்டும். நாற்றங்காலில் நாற்றுக்காக விதைகளை விதைப்பார்கள். நாற்றுக்கள் வளர்ந்ததும் அவற்றைப் பிடுங்கி நடவேண்டிய வயல்களுக்குக் கொண்டுபோவார்கள்.



நெல் பயிரிடவேண்டிய வயலை உழுது சேறாக்குவார்கள்; பரம்படித்துச் சமப்படுத்துவார்கள்; பிறகு நாற்றுக்களை நடுவார்கள். நெற்பயிருக்கு அடிக்கடி தண்ணீர் பாய்ச்சி வருவார்கள். வயலில் உண்டாகும் களைகளைப் பிடுங்குவார்கள். நெற்பயிர் வளர்ந்து கதிர்கள் தள்ளும். தானிய மணிகள் முற்றினதும் பன்அரிவாள்களால் நெற்பயிரை அறுத்துக் கட்டுகளாகக் கட்டுவார்கள்.

அரிக்கட்டுகளைக் களங்களுக்குக் கொண்டுபோவார்கள். அவைகளை எடுத்து அடித்தும், மாடுகளைக் கட்டிப் பிணையல் அடித்தும் தானிய மணிகளை உதிரும்படி செய்வார்கள். வைக்கோலை உதறி எடுத்து உலரப்போடுவார்கள். தானிய மணிகளுடன் கலந்திருக்கும் பதரைப் போக்குவார்கள். வைக்கோலைப் போர் போடுவார்கள். வைக்கோல் மாடுகளுக்கு நல்ல தீவனமாகும்.

நெல்லை சாக்குகளில் போட்டுக் கட்டி வீட்டிற்குக் கொண்டு போவார்கள். நெல்லைக் குற்றி அரிசி தயார் செய்வார்கள்.

கேள்விகள்

1. நெல் பயிரின் நாற்றுக்களை நடுவதற்கு முன்னால் வயலில் நடைபெறும் வேலைகள் என்ன ?
2. தானிய மணிகளை எவ்விதம் பிரித்தெடுக்கிறார்கள் ?

பயிற்சி

நெல் பயிராகும் வயல்களை அடிக்கடி போய்ப் பார்த்து அங்கு நடைபெறும் வேலைகளைக் குறித்து வரவும்.

# 29. பருத்தி

பருத்தி கரிசல் நிலத்தில் நன்றாக வளரும். பருத்திக்கு அதிக மழை வேண்டாம். நிலத்தை நன்றாக உழுது ஆட்டுப் புழுக்கை, மாட்டுச் சாணம் இவைகளை எருவாகப் போடுவார்கள். மழை பெய்ததும் பருத்தி விதைகளை விதைப்பார்கள்.

பருத்திச் செடிகள் நான்கு, ஐந்து மாதங்களில் பூத்துக் காய்க்க ஆரம்பிக்கும். காய்கள் முற்றினதும் அவை வெடித்துப் பருத்தி வெளிப்படும்.

பிறகு பருத்தியைச் சேகரித்து மூட்டைகளாகக் கட்டி இயந்திரசாலைகளுக்குக் கொண்டு போவார்கள். அங்கு பருத்தியிலுள்ள விதைகளை வேறாகவும் பஞ்சை வேறாகவும் பிரிப்பார்கள். பஞ்சை நூலாக நூற்று, துணிகள் நெய்வார்கள்.



நம் நாட்டில் கை ராட்டினங்களிலும் நூல் நூற்கப்படுகிறது. அந்த நூலுக்குக் **கதர் நூல்** என்று பெயர். அதைக் கொண்டு நெய்யப்படும் துணிக்குக் **கதர் துணி** என்று பெயர். நம் நாட்டில் பலர் கைத் தறிகளில் துணிகளை நெய்து ஜீவித்து வருகிறார்கள்.



### கேள்விகள்

1. பருத்தி எவ்வித மண்ணில் நன்றாக வளரும்?
2. பருத்தி இயந்திரசாலைகளில் நடைபெறும் தொழில்கள் என்ன?

### பயிற்சி

பருத்தி சாகுபடியாகும் வயல்கள், பருத்தி இயந்திரசாலைகள் இவைகளைப் போய்ப் பார்க்கவும். பள்ளிக்கூடத் தோட்டத்தில் பருத்திச் செடிகளைப் பயிரிட்டு அவைகளின் வளர்ச்சிகளைக் கவனிக்கவும்

# 30. நிலக்கடலை

நிலக்கடலையை வேர்க்கடலை என்றும் சொல்லுவார்கள். இந்தப் பயிர் மணற் பாங்கான பூமியில் நன்ருக வளரும். நிலத்தை உழுது, குப்பை, கூளங்களை எருவாகப் போடுவார்கள்; நிலக்கடலை விதைகளை விதைப்பார்கள்.



விதைகள் முளைத்து வளரும். கொடிகள் வீசிப் படரும். மஞ்சள் நிறமான சிறிய பூக்கள் பூக்கும். பூக்கள் வாடி உதிரும். அவை இருந்த இடங்களில் சிறு கம்பிகள் போன்ற காய்கள் காணப்படும். அவை நீண்டு வளர்ந்து தரைக்கு அடியில் பதியும்; அவை அங்கு வளர்ந்து பருத்துக் காய்கள் ஆகும். காய்கள் முற்றினதும் இலைகளும், கொடிகளும் பழுப்பு நிறமாகக் காணப்படும். அப்பொழுது குடியானவர்கள் நிலத்தைக் கிளறிக் கொடிகளைப் பிடுங்குவார்கள்; கடலைகளைப் பொறுக்கி எடுப்பார்கள்.

நிலக்கடலையைச் சாதாரணமாக வறுத்துத் தின்கிருேம். அதன் பருப்புகளை வெல்லப் பாகுடன் சேர்த்துத் தின்பதும் உண்டு. நிலக்கடலையிலிருந்து எண்ணெய் எடுக்கிருர்கள். நிலக்கடலை எண்ணெய் விளக்கு எரிக்கவும், பலகாரங்கள் செய்யவும் உபயோகப்படுகிறது. தவிர, இந்த எண்ணெயால் சோப்பு, மெழுகுவர்த்தி முதலியன செய்கிருர்கள். ஆகையால் தான் நம் நாட்டிலிருந்து அயல் நாடுகளுக்கு ஏராளமான நிலக்கடலை ஏற்றுமதியாகிறது.

நிலக்கடலைப் பிண்ணுக்கு மாடுகளுக்கு நல்ல உணவாகிறது. தவிர, அதை நிலத்திற்கு எருவாகவும் உபயோகிக்கிருர்கள்.

### கேள்விகள்

1. நிலக்கடலைப் பயிரின் வளர்ச்சியைப் பற்றிச் சொல்லு.
2. நிலக்கடலையின் உபயோகங்கள் என்ன ?

### பயிற்சி

நிலக்கடலைப் பயிர், நிலக்கடலை இவற்றின் படங்களை வரைக.

# 31. புகையிலை

நமது சென்னை மாகாணத்தில் புகையிலை பல இடங்களில் பயிராகிறது. புகையிலைச் செடிகளைப் பயிர்செய்ய, நிலத்தை நன்ருகக் கொத்திப் பண்படுத்துவார்கள். பங்குனி அல்லது சித்திரை மாதத்தில் புகையிலை விதைகளை நாற்றுப் பாவுவார்கள். நாற்றுக்கள் வளர்ந்ததும் அவைகளைப் பிடுங்குவார்கள். மூன்று அல்லது நான்கு அடிக்கு ஒரு நாற்று வீதம் வரிசை வரிசையாக நடுவார்கள். தண்ணீர் பாய்ச்சி வருவார்கள்.

புகையிலைச் செடியில் அடிப் பாகத்திலுள்ள இலைகள் பெரியவைகளாக இருக்கும்; மேலே செல்லச் செல்ல இலைகள் சிறுத்திருக்கும். புகையிலைச் செடியின் பூக்கள் மஞ்சள் நிறமாக இருக்கும்.

செடிகளிலுள்ள இலைகளைக் கத்தரித்து, உலர்த்திப் பக்குவப் படுத்துவார்கள். பக்குவப் படுத்தப்பட்ட இலைகளைக் கட்டுகளாகக் கட்டி விற்பனைக்கு அனுப்புவார்கள்.

புகையிலை, சுருட்டுகள் செய்ய உபயோகப்படுகிறது. சுருட்டுகள் செய்வதற்காகவே அயல் நாட்டினர் நம் நாட்டிலிருந்து புகையிலையை வருவித்துக் கொள்கிருர்கள். நம் நாட்டில் புகையிலையைக் கொண்டு பொடி செய்கிருர்கள். சிலர் பொடியை மூக்கில் வைத்து உறிஞ்சுகின்றனர். சிலர் புகையிலையை வெற்றிலையுடன் சேர்த்து உபயோகிக்கிருர்கள். புகையிலையை எந்த விதத்தில் உபயோகித்தாலும் அது நாளடைவில் தேகத்திற்குக் கெடுதலை உண்டுபண்ணும்.

கேள்விகள்

1. புகையிலைச் செடிகளை எவ்விதம் பயிர் செய்கிருர்கள்?
2. புகையிலையை எவ்விதங்களில் உபயோகிக்கிருர்கள்?

பயிற்சி

புகையிலை பயிராகுமிடங்களுக்கு அடிக்கடி சென்று அங்கு மாதந்தோறும் நடைபெறும் வேலைகளைக் குறித்து வரவும்.

# 32. தேயிலை

பிள்ளைகளே, நாம் தேயிலைப் பானம் செய்கிறோம் அல்லவா? தேயிலைத்தூள் தேயிலைச் செடிகளின் இலைகளிலிருந்து தயார் செய்யப்படுகிறது. தேயிலைச் செடிகளை மலைச் சரிவுகளில் பயிர் செய்கிறார்கள். தென் இந்தியாவில் நீலகிரி மலைச் சாரல்களிலும், வட இந்தியாவில் அஸ்ஸாமிலும் தேயிலையைப் பயிரிட்டு வருகிறார்கள்.

செடிகளின் வளர்ச்சி மூன்று வருஷங்கள் ஆனதும் இலைகளைப் பறிக்க ஆரம்பிப்பார்கள். ஒவ்வொரு கிளையின் நுனியிலுள்ள இளம் இலைகளையே பறிப்பார்கள்.

பறிக்கப்படும் இலைகளை இயந்திரங்களின் உதவியால் பக்குவமாக உலர்த்தி, சுருட்டித் தூளாக்குவார்கள். தூளைத் தினுசு வாரியாகப் பிரிப்பார்கள்; பிறகு ஈயத் தகடுகள் பொதிந்த பெட்டிகளில் அடைத்து வெளி இடங்களுக்கு அனுப்புவார்கள்.



தேயிலைப் பானத்தை மிதமாகக் குடித்தால் களைப்பு நீங்கும்; சுறுசுறுப்பும் உற்சாகமும் ஏற்படும். அதிகமாகக் குடித்தால் நித்திரை கெடும்.

கேள்விகள்

1. தேயிலைச் செடிகளை எங்கு பயிரிடுகிறார்கள்.
2. எவ்விதமான இலைகளைப் பறிப்பார்கள்? பறிக்கும் இலைகளை எவ்விதமாகப் பக்குவம் செய்கிறார்கள்?

பயிற்சி

தேயிலை பயிரிடுதல், பக்குவம் பண்ணுதல் சம்பந்தமான படங்களைச் சேகரிக்கவும்.

# 33. காப்பி

காப்பிச் செடிகளை மலைச்சரிவுகளில் பயிரிடுகிறார்கள். தென் இந்தியாவில் கொச்சி, திருவாங்கூர், நீலகிரி, குடகு, மைசூர் முதலிய இடங்களிலுள்ள மலைகளின் கிழக்குச் சாரல்களில் காப்பித் தோட்டங்கள் இருக்கின்றன.

முதலில் காடுகளை அழித்து, தரையைச் சமப்படுத்துவார்கள். முற்றின விதைகளை பாத்திகளில் நட்டுத் தண்ணீர் பாய்ச்சி வருவார்கள். ஒரு வருஷம் ஆனதும் செடிகளைப் பிடுங்கி பண்படுத்தப்பட்ட நிலத்தில் நடுவார்கள். அடிக்கடி களை பிடுங்குவார்கள்; நிலத்தைக் கொத்திக் கொடுப்பார்கள்.

காப்பிச் செடிகள் பயிரான நான்கு வருஷங்களில் பூத்துக் காய்க்கும். காய்கள் முதிர்ந்து பழங்கள் ஆகும். பழங்கள் இரத்தம்போன்ற சிவப்பு நிறமாக இருக்கும். கூலி ஆட்கள் பழங்களைப் பறிப்பார்கள். ஒவ்வொரு பழத்திலும் இரண்டு விதைகள் இருக்கும். பழங்களிலிருந்து விதைகளைச் சேகரிப்பார்கள். விதைகளைப் பீப்பாய்களிலாவது சாக்குகளிலாவது போட்டு அயல் இடங்களுக்கு அனுப்புவார்கள். நாம் காப்பிக்கொட்டையை வறுத்துத் தூளாக்கி, 'காப்பி' தயாரித்துக் குடிக்கிறோம்.

### கேள்விகள்

1. காப்பிச் செடிகளை எங்கு பயிரிடுகிறார்கள்?
2. காப்பிச் செடியின் பழங்கள் எவ்விதம் இருக்கும்?

### பயிற்சி

காப்பிச் செடிகளைப் பயிரிடுதல், பழங்களைச் சேகரித்தல், விதைகளைச் சேகரித்தல் முதலியன சம்பந்தமான படங்களைச் சேகரிக்கவும்.

# 34. தோல்

பிள்ளைகளே, நீங்கள் உபயோகிக்கும் பெல்ட், செருப்பு, பணப்பை முதலியன தோலால் செய்யப்பட்டிருக்கின்றன அல்லவா? ஆடு, மாடு முதலிய மிருகங்களின் தோலைப் பதப்படுத்திப் பல தோல் சாமான்கள் செய்கிறார்கள்.

ஆடு, மாடுகளிலிருந்து உரிக்கப்படும் தோல்களை முதலில் தண்ணீரில் ஊற வைப்பார்கள்; பிறகு சுண்ணாம்பு கலந்த நீரில் நனைப்பார்கள். அவற்றின் மீதுள்ள உரோமத்தை மழுங்கலான அரிவாள்களால் தேய்த்துப் போக்கு வார்கள். தோல்களில் ஒட்டியுள்ள சதைப்பற்றான பாகத்தைக் கூர்மை யான அரிவாள்களால் வழித்து நீக்கு வார்கள் பிறகு, தோல்களைத் தண்ணீரில் அலசி அவற்றின் மீது ஒட்டியுள்ள சுண்ணாம்பைப் போக்குவார்கள்.

பிறகு, தோல்களுக்கு இடையிடையே ஆவாரம் பட்டைகளைப் போட்டு சுமார் ஐந்து வாரங்கள் வரை அடுக்கி வைத்திருப்பார்கள். ஆனால் தினந்தோறும் அடுக்குகளைப் பிரித்து இடையிடையே ஆவாரம் பட்டைகளைப் போட்டு வருவார்கள். பிறகு, அத்தோல்களை கடுக்காய்க் கஷாயத்தில் ஊறவைத்து எடுப்பார்கள். அவற்றின் மீது நல்லெண்ணெய் அல்லது கடலை எண்ணெயைத் தேய்த்து உலர்த்துவார்கள். இவ்விதம் பதனிடப்பட்ட தோல்களால் பெல்ட் முதலிய சாமான்கள் செய்யப்படுகின்றன.

### கேள்விகள்

1. தோல்களின் மீதுள்ள உரோமத்தை எவ்விதம் நீக்குகிறார்கள்? பிறகு எவ்விதம் பதனிடுகிறார்கள்?
2. தோலால் செய்யப்படும் சில சாமான்களைச் சொல்லு.

### பயிற்சி

தோலின் மீதுள்ள உரோமத்தை நீக்க உபயோகிக்கும் அரிவாளைப் போல் அட்டையால் செய்யவும்.

## அனுபந்தம்

## கால நிலை

வெயில், காற்று இவை எல்லா நாட்களிலும் ஒரே மாதிரியாக இருக்கின்றனவா? இல்லை அல்லவா? சில நாட்களில் வெயில் அதிகமாக இருக்கும்; சில நாட்களில் குறைவாக இருக்கும். சில நாட்களில் காற்று பலமாக வீசும்; சில நாட்களில் இலேசாக வீசும். சில நாட்களில் ஆகாயத்தில் மேகங்கள் அதிகமாகக் காணப்படும்; மந்தாரமாக இருக்கும். சில தினங்களில் மழை பெய்யும்; சில வேளைகளில் தூறலாகவும், சில வேளைகளில் விடா மழையாகவும் பெய்யும். இவ்விதம் ஒவ்வொரு தினத்திலும் ஏற்படும் வெயில், காற்று, மழை இவைகளின் தன்மைக்குக் **காலநிலை** என்று பெயர். சில நாட்களின் காலநிலை சுகமாக இருக்கும்.

வெயில், காற்று, மழை இவைகளை நீங்கள் தினந்தோறும் கவனித்துக் குறித்து வரவேண்டும். அக் குறிப்பைக் **காலநிலைக் குறிப்பு** எனலாம். அதைக் கீழ்க் கண்டபடி படங்களின் மூலம் காட்டுவது நல்லது.



1 2 3 4 5 6 7 8

1. வெயில் அதிகம்.
2. வெயில் சுமார்.
3. மந்தாரம்.
4. மெதுவாக வீசும் காற்று.
5. பலமாக வீசும் காற்று.
6. மிகவும் பலமாக வீசும் காற்று.
7. கனத்த மழை.
8. தூறல்.

காற்று எத்திசையை நோக்கி வீசுகிறதோ அத் திசையை நோக்கி அம்பின் தலைப்பக்கம் இருக்கவேண்டும்.

காலக் குறிப்பைக் கீழ்க் கண்ட தலைப்புகளின்படி படங்கள் வரைந்து குறித்து வரவும்:

| மாதம் | தேதி | வெயில் | காற்று | மழை |
|---|---|---|---|---|
| ஜூன் 1941 | 3 |  |  | |
| | 20 |  |  | |
| | 28 | |  |  |
| டிசம்பர் 1941 | 22 | |  |  |

மேற்கண்ட குறிப்பைப் பார்த்துப் பதில் சொல்லு:

1. எத்தினத்தில் அதிக வெயில்? 2. எத்தினத்தில் தூறல் ஏற்பட்டது? 3. ஜூன் மாதம் 28-ம் தேதி எத்திசைக் காற்று வீசியது? அது எவ்விதமான காற்று? 4. எத்தினத்தில் மிகப் பலமான காற்று வீசியது? 5. கனத்த மழை எத்தினத்தில் பெய்தது? அன்று எத்திசைக் காற்று வீசியது?

PRINTED AT THE HILAL PRESS, TIRUNELVELI — 9-'42.

2450